# வருடாந்த அறிக்கை-2014

## விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகம்
## பேராதனைப் பல்கலைக்கழகம



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் குறிக்கோள் | i |
| | நிறுவகத்தின் அமைப்பு வரைபடம் | ii |
| | முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் | iii |
| 1. | 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளரின் மீளாய்வு | |
| | 1.1 அறிமுகம் | 1 |
| | 1.2 கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் | 1 |
| | 1.3 வருடாந்த காங்கிரஸ் | 1 |
| | 1.4 அடைவுகள் | 3 |
| | 1.5 பலவீனங்களும் பரிந்துரைகளும் | 3 |
| | 1.6 எதிர்காலத் திட்டங்கள | 4 |
| 2. | வளங்கள் மாணவர்கள் பற்றிய விபரங்கள் | 5 |
| 3 | 31.12.2014 இல் கல்விசார் பதவியணியினர் விபரம் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்) | 7 |
| 4. | 31.12.2014 இல் கல்விசாரா பதவியணியினர் விபரம் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்) | 8 |
| | 4.1 ஆட்சேரப்புக்கள் | 9 |
| | 4.2 ஓய்வுபெற்றோர் | 9 |
| | 4.3 விவ.ப.பி.நி பதவியணியினருக்கான பயிற்சியும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் | 9 |
| 5. | ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள், பிரசுரங்கள் - 2014 | 11 |
| 6. | 2014 இல் நிகழ்ச்சித்திட்டங்கள்,கருத்தரங்குகள்,மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் | 11 |
| 7. | 2014 இல் நடாத்தப்பட்ட குறுகிய பாடநெறிகள் பயிற்சி /அறிவுட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் செயலமர்வுகள் கருத்தரங்குகள் தொடர்பான விபரங்கள் | 12 |
| 8. | 2014 இல் நடாத்தப்பட்ட சர்வதேச குறுகிய பாடநெறிகள் பயிற்சி /அறிவுட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் செயலமர்வுகள் கருத்தரங்குகள் தொடர்பான விபரங்கள் | 14 |
| 9. | 2014 இல் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களும் புரிந்துணர்வுகளும் | 14 |
| 10. | 2014 இல் பதவியணியினர் மற்றும் மாணவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் | 14 |
| 11. | 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கபட்ட புதிய பாடநெறிகள் | 15 |
| 12. | வருடாந்த காங்கிரஸ் | 16 |
| 13. | பொது நிர்வாகம் | 18 |
| 14. | விவசாய நூலகம் | 21 |
| 15. | 2014 ஆம் ஆண்டின் நிறுவகத்தின் நிதிச் செயலாற்றல் | 24 |
| | 15.1 மீண்டெழும் செலவின விபரங்கள் | 24 |
| | 15.2 மூலதன செலவின விபரங்கள் | 25 |
| 16. | கணக்காய்வு குழு அறிக்கை | 26 |

## 1. தொலைநோக்கு

விவசாயம் மற்றும் அதனோடு இணைந்த துறைகளில் பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி மற்றும் அடைவுகளினூடாக நாட்டினதும் தொழிற்துறையினதும் மற்றும் உலகலாவிய சமூகத்தினதும் தேவைகளை தேவைகளுக்கான சேவையினை வழங்குகின்ற சிறந்த நிலையமாக செயற்படுதல்.

## 2. செயற்பணி

உயர்தர கற்பித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் என்பனவற்றின் மூலம் சிறந்த கல்விசார், செயன்முறைப் ரீதியான பயிற்சியினை வழங்குவதன் மூலம் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளிற்கு சாதகமான பங்களிப்பை வழங்கக் கூடிய தேர்ச்சிமிக்க, புத்தாக்கமுடைய ஈடுபாடுடைய தொழில்வாண்மையினரை உருவாக்குவதற்கான பட்டப்பின்படிப்பு மற்றும் ஆய்வு என்பனவற்றின் மையமாக சேவையாற்றுதல்.

### நோக்கங்கள்

1. சிறந்த கல்வி தரத்தை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

2. பட்டப்பின் படிப்பிற்கான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது தொடர்பான சிறப்பான ஒரு மையாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அங்கீகாரத்தைப் பெறுதல்

3. கண்டு பிடிப்புக்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான கலாசாரத்தை ஸ்தாபித்தல்

4. நிதியுடன் சார்ந்த பலம்வாய்ந்த நிறுவனமொன்றாக உருவாகுதல்

## விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அமைப்பு வரைபடம்



# முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1 | பேராசிரியர். கொலின்.N பீரிஸ் பணிப்பாளர், விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் |
| 2 | திரு.டக்லஸ் நானயக்கார, மேலதிகச் செயலாளர் செயலாளரின் பிரதிநிதி, உயர் கல்வி அமைச்சு |
| 3 | கலா.A.J சத்தரசிங்ஹ, மேலதிக பணிப்பாளர் நாயகம் புள்ளிவிபரத் திணைக்களம், நிதி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி |
| 4. | திரு.R.B.M மீகஸ்முல்ல, செயலாளர், விவசாய அமைச்சின் பிரதிநிதி |
| 5 | திரு.H.L திரேசா, செயலாளர் (கால்நடை இனவிருத்தி) கால்நடை அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி |
| 6 | செயலாளர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினைப் பிரதிநிதி (வெற்றிடம்) |
| 7 | திரு.K.A.I.D.சில்வா பணிப்பாளர், கொள்கைத் திட்டமிடல், சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி |
| 8. | திரு.அனுர சதுருசிங்ஹ, வனப்பாதுகாப்பு நாயகம், காட்டு இலாக்கா திணைக்களத்தின் பிரதிநிதி |
| 9. | காலா.ஜே.டி. சமரசிங்ஹ, தலைவர், விவசாய ஆராய்ச்சிக் கொள்கை பேரவை |
| 10. | கலா. ரோஹான் விஜேகோன், விவசாயப் பணிப்பாளர் நாயகம் |
| 11. | கலா.D.R.T.G ரத்நாயக்க, பணிப்பாளர் நாயகம் - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் |
| 12. | திரு.N.K.A. ரூபசிங்ஹ, பணிப்பாளர் நாயகம் - ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் |
| 13. | கலா.H.A.G. குணதிலக்க, பணிப்பாளர் - தென்னை ஆராய்ச்சி நிறுவகம் |
| 14. | பேரா.K. சமரசிங்ஹ, பீடாதிபதி – விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம். |
| 15. | கலா.M.G.T.S. அமரசேகர – பீடாதிபதி, விவசாய பீடம், ரஜரட்ட பல்கலைக்கழகம். |
| 16. | பேரா.D.P.T.S.G.அத்தநாயக்க, பீடாதிபதி, விவசாய பீடம், வயம்ப பல்கலைக்கழகம். |
| 17. | கலா.A.D அம்பிட்டியாவத்த, பீடாதிபதி, விவசாய பீடம், சபரகமுவ பல்கலைக்கழகம். |
| 18. | பேரா.S.சுபசிங்ஹ, பீடாதிபதி, விவசாய பீடம், ருஹுணு பல்கலைக்கழகம். |
| 19. | கலா.P. சிவராஜ்,பீடாதிபதி, விவசாய பீடம், கிழக்கு பல்கலைக்கழகம். |
| 20 | கலா.(செல்வி)S.சிவசந்திரன், பீடாதிபதி, விவசாய பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். |
| 21 | கலா. H.S.B. ஆரியரத்ன, பீடாதிபதி, மிருக வைத்திய மற்றும் கால்நடை விஞ்ஞான பீடம், |

விவசாய பீடத்தின் நியமன அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| 22. | பேரா.V.A சுமனசிங்ஹ, விவசாய உயிரியல் கல்விச் சபை |
| 23. | பேரா.(செல்வி) H.L.J. வீரஹேவா, விவசாய பொருளியல் கல்விச் சபை |
| 24. | பேரா.E.R.N. குணவர்தன, விவசாய பொறியியல் கல்விச் சபை |
| 25. | கலா. H.V.A. விக்ரமசூரிய, விவசாய விரிவாக்கல் கல்விச் சபை |
| 26. | பேரா.H.W. சிரில், மிருக விஞ்ஞான கல்விச் சபை ரஹேவா, |
| 27. | கலா. B.L. பீரிஸ், உயிர் புள்ளிவிபரவியல் கல்விச் சபை |
| 28. | கலா.சாமலா குமார், வியாபார நிர்வாமாணி கல்விச் சபை |
| 29. | பேரா. H.M.G.S.B.ஹிட்டிநாயக்க, பயிர் விஞ்ஞான கல்விச் சபை |
| 30. | பேரா. D.G.N.G. விஜேசிங்ஹ உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கல்விச் சபை |
| 31. | பேரா.(செல்வி) D.M. de.கொஸ்தா, தாவர பாதுகாப்பு கல்விச் சபை |
| 32. | பேரா. A.N. ஜயகொடி, புவி விஞ்ஞானம் கல்விச் சபை |

**பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்**

| | |
|---|---|
| 33. | பேரா. R.P. de. சில்வா |
| 34. | பேரா.B.S.B. கருணாரத்ன |
| 35. | பேரா.S.S.E ரணவன |
| 36. | கலா.D.B.T விஜேரத்ன |
| 37. | பேரா. S.K. பின்னவெள |

1. 2014 ஆம் ஆண்டில் நிறுவகம் தொடர்பாக பணிப்பாளரின் கூற்று/ மீளாய்வு விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (பணிப்பாளர் கலா. எஸ். சமித அவர்களின் அறிக்கை)

## 1.1 அறிமுகம்

இலங்கையில் பட்டப்பின்படிப்பை மேம்படுத்தும் வகையில் முன்னனி நிறுவகமொன்றாக பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (வி.ப.பி.நி) 1979 யூன் மாதம் 1979 இன் 9 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவகமானது விவசாயத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்ற பல்வேறுபட்ட கல்விசார் உத்தியோகத்தர்களையும் விவசாய அமைச்சையும் சுற்றாடல் மற்றும் வன வளங்கள், கால்நடை வளங்கள் பெருந்தோட்டத்துறை, உயர்கல்வி, கால்நடை மற்றும் சுகாதாரத் திணைக்களம் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறந்த பிரமுகர்களையும் கல்விமான்களையும் கொண்ட முகாமைத்துவக் குழுவினால் நிறுவகிக்கப்படுகின்றது. நாட்டின் பட்டப்பின் படிப்பு கல்வி இயலுமையை அபிவிருத்திசெய்தல் மற்றும் பொருத்தமான பயிற்றப்பட்ட விஞ்ஞான ரீதியான அறிவுடன் ஆளணிகளை உருவாக்கி துரிதமாக வளர்ச்சியடையும் விவசாயத்துறைக்கு வழங்குதல் போன்ற பிரதான நோக்கங்களுக்காகவே இந்நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது. எதிர்ப்பார்த்தன் பிரகாரம் கால்நூற்றாண்டிற்கு மேலாக சுற்றாடல் மாசடைதல், பாதுகாப்பான உணவு, உணவுப் பாதுகாப்பு போன்ற விவசாயத்துறையில் புதிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் புதிய தந்திரோபாயங்களை ஆராய்ந்து தேசிய தேவைப்பாட்டை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்நிறுவனம் இருந்து வருகின்றது.

## 1.2 கல்விசார் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள்

மிகவும் தகுதி வாய்ந்த அனுபவமுள்ள கல்விசார் பதவியணியினரின் பங்களிப்புடன் நிறுவனத்தின் விவசாய பீடத்தினதும் இந்நிறுவகத்திற்குச் சொந்தமாக உள்ள நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வுகூடம், கணனி ஆய்வுகூடம், வாசிகசாலை மற்றும் விரிவுரை மண்டபங்களையும் பயன்படுத்தி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திலிருந்தும் ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்தும் மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்தும் ஏனைய தகைமையுள்ள அமைப்புக்களிடமிருந்தும் வெளி விரிவுரையாளர்களைப் பெற்று விரிவுரைகள் மேற்கொள்ளப்படுகன்றது. பீடத்திலும் நிறுவகத்திலும் காணப்படுகின்ற தகவல் தொழில்நுட்பகூடம் மற்றம் விரிவுரை மண்டபங்களைப் பயன்படுத்தி நன்கு தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த கல்விசாரா ஊழியர்கள் கலை தம்மாலான உச்ச சேவைகளை வழங்குகின்றனர்.

விவசாயத்துறையின் வெவ்வேறு துறைகள் தொடர்பாக விசேட நிபுணத்துவத்துடன் கூடிய 300 இற்கு மேற்பட்ட வருகைதரு விரிவுரையாளர்களால் 11 கல்விச்சபைகள் மூலம் குறித்த கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிறுவகத்தினால் 02 பட்டப்பின் படிப்புப் பாடநெறிகள் உட்பட 35 பட்டப்பின் படிப்பு கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு வருவதுடன், வியாபார நிர்வாகம் தொடர்பான முதுமானி (M.Sc), தத்துவ முதுமானி, தத்துவ கலாநிதி, வியாபார நிர்வாகம் தொடர்பான கலாநிதி பட்டப்படிப்பு உட்பட 29 பாடநெறிகளும்

நடாத்தப்படுகின்றன. இந்நிறுவகத்திற்கு வருடாந்தம் 400 – 500 வரையான மாணவர் அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கமைய பல்வேறு வகை சமூகத்தைச் சேர்ந்த 2000 மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ***வழக்கத்தை விட அதிகம்*** என்கின்ற தாரக மந்திரத்திற்கமைய பல்கலைகத்தின் அனைத்து பீடங்களிலிருந்தும் பட்டதாரிகளை இந்நிறுவகத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மீளாய்வாண்டில் 11 கல்விச்சபைகளிலும் 482 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

- 376 – 26 பல்வேறுபட்ட முதுமானி பாடநெறிகள் 11 கல்விச் சபைகளினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 24 கானா நாட்டு மாணவர்களும் அடங்குவர்.
- 45 – வியாபாரக் கற்கை / வியாபார நிர்வாகம் போன்ற துறைகளில் வியாபார
முதுமானிப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.
- 37 - தத்துவ முதுமானி
- 21 - தத்துவக் கலாநிதி மற்றும் 03 – அமைய அடிப்படையில்

345 மாணவர்கள் தமது பட்டப்படிப்பு/ பட்டப்பின்படிப்பு ஆகியவற்றை நிறைவு செய்துள்ளனர். பால் அடிப்படையில் அவர்களது விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

- விஞ்ஞான முதுமானி – 127/15, தத்துவ முதுமானி – 10/06, தத்துவக் கலாநிதி - 04/01 , பட்டப்பின்படிப்பு டிப்ளோமா - 12/15 (***ஆ/பெ***)

தேசிய தேவைகளையும் நாட்டின் தேவைகளையும் மையமாகக் கொண்டு விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (விவ.ப.பி.நி) தனது கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் தீவிரமாக கவனம் செலுத்தி அவற்றை வலுவடையச் செய்கின்றது. மீளாய்வாண்டில் இந்த உன்னத நோக்கத்தை நிறைவேற்றுமுகமாக கல்விச் சபை அனைத்து பங்குதாரர்களினதும் ஆலோசனைச் செயன்முறையினூடாகவும் தீவிர பங்களிப்புடனும் முழுக்கலைத்திட்டத்தையும் மீளாய்வு செய்தது. அதற்கமைய புதிய விவரக்குறிப்புக்கள் மற்றும் மாணவர் கைநூல்கள் என்பன 2014 ஆம் ஆண்டு புதிதாக நிறுவகத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு விநியோகிப்பதற்காக அச்சிடப்பட்டுள்ளன. இதற்கமைய புதிய இரு நிகழ்ச்சித்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன. மற்றும் பல பாடநெறி அலகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்காகவும் பட்டப்படிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் ஏற்கனவே உள்ள கலைத்திட்டத்தில் சில பாட அலகுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

## 1.3 வருடாந்த மாநாடு

நிறுவகத்தின் வருடாந்த நாட்காட்டியில் அனைவரதும் கவனத்தை ஈர்க்கக் கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டமாகவுள்ள நிறுவகத்தின் 26 ஆவது வருடாந்த மாநாடு, உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிறுவகத்தின் கல்விசார் ஆளனியினரும் மற்றும் மாணவர்களும் பங்குபற்றி அவர்கள் தமது ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மூலமாகப் பெற்றுக் கொண்ட அறிவு, அனுபவம் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கும் அவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கும் முக்கியமான ஒரு தளமாகக் காணப்படுகின்றது. இந்நிகழ்ச்சி 2014 நவெம்பர் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் பிராந்திய பிரதிநிதி கலாநிதி ஸ்டெவ்.ஜே.ஸ்டால் இன் தலைமையில் மிகப் விமரிசையாகக் கண்டியில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நிறுவக ஆராய்ச்சியாளர்களிடம் இருந்து 24 சுவரொட்டிகள் அடங்கிய 73 விளக்கக்காட்சிகள் கிடைத்திருந்தன. பத்து அமர்வுகளிலும் விவசாயத்துடன் தொடர்புடைய பல்வேறு பாடப்பரப்புக்களின் கீழ் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், கொரியா, இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இருந்து பங்குபற்றிய ஆராய்ச்சியாளர்களில் இருந்து 37 மிகச்சிறந்த ஆராய்ச்சி ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. சிறந்த விளக்கக்காட்சிகளுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. 2014 இற்கான இணைப்பாளர் கலாநிதி எஸ்.பாதராஜாவினால் ***வெப்பமண்டல விவசாய ஆராய்ச்சி அத்தி.26(1)*** என்கின்ற ஆராய்ச்சிக் கட்டுரை பிரதம அதிதி அவர்களுக்கும் சிறப்பு அதிதி அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

## 1.4 வெற்றிகள்

1981 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட நிறுவகத்தின் பிரதான கட்டடம் திருத்தியமைக்கப்பட்டது. வகுப்பறைகள் 13 இலிருந்து 17 ஆக அதிகரிக்கப்பட்டன. அத்துடன் விரிவுரை மண்டபங்களுக்கு நவீன வசதிகளும் வழங்கப்பட்டன. ஆசிரியர்களிற்கும் மாணவர்களுக்கும் இடையே இணைய வழிக் கற்றல் கற்பித்தல் செயன்முறையை ஊக்கப்படுத்துவதற்காகவும் உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தில் முடிவுகளை எடுப்பதற்கும், தொழிலாளர்களின் செயற்றிறனையும் வினைதிறனையும் மேம்படுத்துவதற்காகவும் முகாமைத்துவ தகவல் முறைமையானது (Management Information System) தாபிக்கப்பட்டது. நிறுவனத்தின் மூலதன மானியமானது பௌதீக உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக உற்பத்தித்திறனுடன் பயன்படுத்தப்பட்டது. கட்டண அறவீடு தொடர்பான முறைமைகள் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் தந்திரோபாய முயற்சிகள் காரணமாக 80% பாடநெறிக்கட்டணங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது நிறுவக வரலாற்றில் மிகப்பெரிய வெற்றியாகும்.

ஒரு தசாப்த காலமாக எழுப்பப்படும் கணக்காய்வு ஐய வினாக்களைக் குறைப்பதற்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு முடிவடையும்

தறுவாயிலுள்ளது. வெற்றிடமாகவுள்ள 04 பதவிகளுக்காக 01 எழுதுவினைஞரும் (வகுப்பு III) 03 தொழிலாளர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும், கல்விச் சபையின் போதனை நடவடிக்கைகளுக்காக முழு நேர ஆசிரியர் ஒருவரும் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சாரதி பதவிக்காக புதிய பதவியணியினர் ஒருவரை நியமிப்பதற்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**1.5 தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்:**

மீளாய்வாண்டில் குறிப்பிடத்தக்க எந்தத் தோல்வியும் எதிர்கொள்ளப்படவில்லை. எனினும், எடுக்கப்படும் முயற்சிகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, உள்ளக மாணவர்களை அனுமதித்தலில் முன்னேற்றம் காணப்படாததுடன், பாடநெறியை இடையில் விட்டுச் செல்பவர்களைத் தடுத்து நிறுத்த முடியாதுமுள்ளது. மேலும், புலமைப்பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டாலும் எதிர்பார்த்த அளவு வெளிநாட்டு மாணவர்களின் அனுமதியும் அதிகரிக்கவில்லை. இதற்கான காரணம் நிறுவகம் நாட்டின் மையத்தில் இருந்து தொலைவில் காணப்படுவதும், வெளிநாட்டு மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் குறைவாகக் காணப்படுவதுமாகும். போதிய தராதரங்கள் உடைய விண்ணப்பதாரிகள் இன்மையினால் இரு பதவி வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை.

**1.6 எதிர்காலத் திட்டங்கள்:**

ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு இணங்க, நிறுவகத்தை எதிர்காலத்தில் சிறந்த உயர்தரமான ஒரு நிறுவகமாக மாற்றுவதே பிரதான நோக்கமாகும். இலங்கை தர உறுதிப்பாட்டு கட்டமைப்பிற்கேற்ப இந்த மைல் கல்லை அடைவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ளன. நிறுவகம் தனது கடல் கடந்த திட்டத்தின் மூலமாக உயிரியல் புள்ளி விபரவியல் துறையில் விஞ்ஞான முதுமானிப் பாடத்திட்டத்தை 2014 ஆம் ஆண்டு மார்ச் தொடக்கம் கானாவில் ஆரம்பிப்பதற்கு கல்விக்குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், யெசுவா பல்கலைக்கழகத்திற்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கும் (வி.ப.பி.நி) இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் கானாவிலிருந்தும் அண்மித்த நாடுகளில் இருந்தும் 20 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதுடன் நிறுவகத்தின் விரிவுரையாளர்கள் உரிய நேரசுசியின் அடிப்படையில் கானா நாட்டிற்குச் சென்று கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் நிறுவகத்தின் பாடநெறிக்கட்டணத்தை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், முக்கியமாக நிறுவகம் பொதுக் கணக்குகள் குழுவின் COPE பரிந்துரைக்கிணங்க உணவு சார்ந்த துறைகளில் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மத்திய

ஆய்வு கூடம் ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஈட்டும் வெற்றியின் அடிப்படையில் முதலில் கொழும்பிலும் பின் கிளிநொச்சியிலும் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு வதிவிட வசதியை வழங்குவதற்காகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு கட்டடத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை அனைத்தும் எதிர்காலத்தில் நிறுவகத்தின் 2014-2017 வரையான கூட்டிணைந்த திட்டத்தின் ஒரு பிரதான நோக்கத்தை அதாவது, நிதி நிலைப்பாட்டை எய்துவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.

## 2. வளங்களினதும் மாணவர்களினதும் விபரங்கள் - 2014

| பாடநெறி | மாணவர்களின் தொகை | பதவியணியினரின் பரம்பல் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்) | | | |
|---|---|---|---|---|---|
| | | கல்விசார் ஊழியர்கள் | கல்விசாரா ஊழியர்கள் | கல்வித்துணை ஊழியர்கள் | மொத்தம் |
| பட்டபின்படிப்பு டிப்ளோமா | | 01 | 40 | 01 | 42 |
| விஞ்ஞான முதுமானி | 376 | | | | |
| வியாபார நிர்வாகம் முதுமானி | 45 | | | | |
| தத்துவமானி | 37 | | | | |
| தத்துவ முதுமானி | 21 | | | | |
| Casual | 03 | | | | |
| **மொத்தம்** | 482 | 01 | 40 | 01 | 42 |

மேற்குறித்த அட்டவணை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வளங்களினதும் மாணவர்களினதும் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் பல்வேறு பட்டப்பின் படிப்பு பட்டங்களுக்காக பதிவு செய்து கொண்ட மாணவர் தொகையும் நிரந்தர பதவியணியினர் தொடர்பான விபரங்களும் தரப்பட்டுள்ளன.

விவசாய வாசிகசாலையில் சிரேஷ்ட உதவி நூலகரும் தரம் 1 தொழிலாளி ஒருவரும் இவ்வருடத்தில் ஓய்வு பெற்றனர்.

உள்நாட்டு மாணவர்களின் விபரம் - 2014

| பாடநெறி | மாணவர் பதிவு - 2014 | மாணவர் பதிவு - 2013 | பட்டம் பெற்றோர்-2014* |
|---|---|---|---|
| பட்டபின்படிப்பு டிப்ளோமா | - | - | 27 |
| விஞ்ஞான முதுமானி | 376 | 328 | 270 |
| வியாபார நிர்வாகம் முதுமானி | 45 | 45 | 27 |
| தத்துவமானி | 37 | 31 | 16 |
| தத்துவ முதுமானி | 21 | 04 | 04 |
| Casual | 03 | - | - |
| **மொத்தம்** | **482** | **408** | **345** |

* 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பதிவு செய்த மாணவர்களும் 2014 ஆம் ஆண்டில் வெளியேறிய மாணவர்களும்.

மேலும், சித்தியடையாத மாணவர்களும் நுண்ணறிவுச் சோதனைகளிற்குத் தோற்றாத மாணவர்களுக்கும் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம் வழங்கப்பட்டது. மேலும், மீளாய்வாண்டில் நேரடியாக மாணவர்கள் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிக்கு அனுமதிக்கப்படவில்லை.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மாணவர் பட்டம் பெறும் மாணவர்கள் தொகையிலும் பாடநெறிக்கு சேரும் மாணவர்கள் தொகையிலும் அதிகரிப்பு காணப்பட்டது. 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் பட்டம் பெற்ற மாணவர்கள் தொகையும் பாடநெறிக்கு சேர்ந்த மாணவர்கள் தொகையும் பின்வரும் இரு வரைபுகளிலும் காட்டப்பட்டுள்ளன.






### வெளிநாட்டு மாணவர்களின் விபரம் - 2014

| பாடநெறி | மாணவர் பதிவு - 2014 | மாணவர் பதிவு - 2013 | பட்டம் பெற்றோர்-2014 |
|---|---|---|---|
| பட்டபின்படிப்பு டிப்ளோமா | - | - | |
| விஞ்ஞான முதுமானி | 17 | 01 | 01 |
| வியாபார நிர்வாகம் முதுமானி | - | - | |
| தத்துவ முதுமானி | - | - | |
| தத்துவக் கலாநிதி | - | 02 | 01 |
| **மொத்தம்** | **17** | **03** | **02** |

மீளாய்வாண்டில் கானா, அக்ராவிலுள்ள யெசுவா பல்கலைக்கழகத்திற்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கும் (வி.ப.பி.நி) இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் நிறுவகம் தனது கடல் கடந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இப்புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 17 மாணவர்கள் உயிரியல் புள்ளிவிபரவியலில் கல்விக்குழுவின் கீழ் பிரயோகப் புள்ளிவிபரவியல் துறையில் விஞ்ஞான முதுமானிப்பட்டத்தை பின்பற்றுவதற்குப் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் நிறுவனம் அதனது ஒரு முதன்மை தேர்ச்சி காரணியை அதாவது, வெளிநாட்டு மாணவர் தொகையை அதிகரித்தல் என்கின்ற நோக்கத்தை எய்தியுள்ளது.

## 3. 2014 திசம்பர் 31 இலுள்ளவாறு கல்விசார் பதவியணியினரின் விபரம் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்)

| நிறுவகம் | பாடநெறி | மொழிமூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | | பேராசிரியர் | | பேராசிரியர் | | சிரேஷ்ட விரிவுரையாளர் | | விரிவுரையாளர் | | கல்வித்துணை உத்தியோகத்தர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் | அவசியமற்றது | ஆங்கிலம் | 1 | | | | | | | | | | 1 | | 2 | 0 |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | 1 | | | | | | | | | | 1 | | 2 | 0 |

ஆ- ஆண், பெ- பெண்

மேற்படி அட்டவணையில் நிறுவகத்தின் கல்விசார் உத்தியோத்தர்களின் விபரம் தரப்பட்டுள்ளது. இதில் நிறுவகத்தின் பணிப்பாளரும் அடங்குவர். அத்துடன் ஒரு நிகழ்ச்சித்திட்ட மற்றும் முறைமை பகுப்பாய்வாளர் கல்வித்துணை உத்தியோகத்தராக பணிபுரிகின்றார். இவரும் அட்டவணையில் உட்படுத்தப்பட்டுள்ளார். நிறுவகத்தின் தேவை

அடிப்படையில் ஒரு சிரேஷ்ட பேராசிரியரும் 01 செய்முறை பயிற்சியாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நிறுவகத்தில் நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வகுதியில் அடங்குவர். இவர்களுக்கான சம்பளம் சில செயன்முறைகளிலிருந்தான வருமானத்திலிருந்து செலுத்தப்படுகின்றது.

அனைத்து கல்விசார் நடவடிக்கைகளும் 300 இற்கு மேற்பட்ட வருகைதரு விரிவுரையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. இவர்களில் அதிகமானோர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

## **4.** 2014 திசம்பர் 31 இலுள்ளவாறு கல்விசாரா ஊழியர்களின் விபரம் (நிரந்தர பதவியணியினர் மாத்திரம்)

1.

| **கிளை** | **அதி சிரேஷ்ட** | | **சிரேஷ்ட பதவியணி** | | **கனிஷ்ட பதவியணி** | | **சிற்றூழியர்** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| பொது நிர்வாகம் | | 03 | - | 01 | 04 | 02 | 08 | 01 |
| மாணவர் அனுமதி | - | - | - | 01 | 02 | 01 | 01 | - |
| கணக்குகள் | 01 | - | - | 01 | 05 | - | 01 | - |
| வாசிகசாலை | - | - | - | 02 | - | 01 | 03 | 01 |
| கணனி பிரிவு | | | | | 01 | - | 02 | |
| **மொத்தம்** | **01** | **03** | **-** | **05** | **12** | **04** | **15** | **02** |

1. நிர்வாக மட்டம் மற்றும் நிறைவேற்றுத்தரம் 2. சிரேஷ்ட பதவி நிலைத்தரங்கள்
3. எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் 4. மேற்படி தரங்களுக்கு கீழான தரங்கள்

## 4.1 ஆட்சேர்ப்பு:

கல்விசாரா ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களின் விபரங்கள் வருமாறு:

1. 2014 மார்ச் 18 ஆம் திகதி தொடக்கம் திருமதி E.M.N.D ஏக்கநாயக்க அவர்கள்தொலைபேசி இயக்குனராகவும் வரவேற்பு உத்தியோகத்தராக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

2. 2014 செப்தெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம்திருமதி K.A.P. த. சில்வா அவர்கள் தரம் 11 தட்டச்சு உத்தியோகத்தர் (ஆங்கிலம்) சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

## 4.2 ஓய்வு:

2014 ஆம் ஆண்டு பின்வரும் உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றனர்:

1. விவசாய பீட வாசிகசாலையில் சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி ஐ. முதநாயக்க அவர்கள் 34 வருட அதீத சேவையின் பின் 2014 நவெம்பர் 14 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் பிலிப்பீன் பல்கலைக்கழகத்தில் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான முதுமானிப் பட்டதாரியும் இலங்கை வாசிகசாலை நிறுவனத்தின் உறுப்பினரும் ஆவார்.

2. நிறுவனத்திற்கு 29 வருட கால உன்னத சேவையை வழங்கிய பின் சிற்றூழியர் தரம் 1 ஐச் சேர்ந்த திரு K.P. ஜயசிங்க அவர்கள் 2014 ஜுலை 16 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

## 4.3 பதவியணியினருக்கான பயிற்சியும் அபிவிருத்தி நடவடிக்கைளும்

மீளாய்வாண்டில் நிறுவகம் தனது பதவியணியினருக்குப் பயிற்சிகளை வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தியது. கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி நிறுவகம் தனது பதவியணியினரின் அறிவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்கியது. விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிர்வாக உத்தியோகத்தர்களும் உதவி உத்தியோகத்தர்களும் பின்வரும் பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றினர்:

1. பிரதி பதிவாளர் திருமதி சமுத்திரிகா ஹேரத் அவர்கள் 2014 ஜுலை 7 ஆம் திகதி இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட “மக்கள் முகாமை” தொடர்பான ஒரு நாள் செயலமர்வில் பங்குபற்றினார்.

2. பிரதி பதிவாளர் திருமதி சமுத்ரிகா ஹேரத் அவர்கள் 2014 நவெம்பர் 11-21 வரை தாய்லாந்தின் கெஸட்சார்ட் பல்கலைக்கழத்தின் அபிவிருத்தி தொடர்பாடலுக்கான சர்வதேச மையத்தினால் நடாத்தப்பட்ட “பங்குபற்றல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு” தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்.

3. பிரதி பதிவாளர் திருமதி சமுத்ரிகா ஹேரத், சிரேஷ்ட உதவி நிதியாளர் திருB.G.S.P. ஜயகொடி, உதவி பதிவாளர் திருமதி K.S.K ஹேரத் ஆகியோர் 2014 திசம்பர் 12-13 வரை உயர் கல்வி அமைச்சினால் பேராதனைப் பல்கலைக்கழத்தில் இரண்டு நாட்கள் நடாத்தப்பட்ட “நிதியல்லா முகாமையாளர்களுக்கான நிதி முகாமைத்துவம்” தொடர்பான செயலமர்வில் பங்குபற்றினார்கள்.

4. பணிப்பாளரின் சிரேஷ்ட பிரத்தியேக செயலாளர் திருமதி C. தஹநாயக்க அவர்கள் 2014 ஜனவரி 23-24 வரை சிங்கப்பூரில் நடைபெற்ற “நிறைவேற்று பிரத்தியேக செயலாளரின் திறமை” என்கின்ற செயலமர்வில் பங்குபற்றினார்.

5. சிரேஷ்ட உதவி பதவியணியைச் சேர்ந்த (தட்டச்சு சேவை) திருமதி S.ஹபுஆரச்சி அவர்கள் இளைஞர் சேவைகள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட “செயலாளர் பயிற்சிகள்” பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட “தட்டச்சு உத்தியோகத்தர்களுக்கான ஆளுமை விருத்தி” ஆகிய இரு செயலமர்வுகளிலும் பங்குபற்றினார்.

6. தொலைபேசி இயக்குனரும் வரவேற்பு உத்தியோகத்தருமான திருமதி E.M.N.D.ஏக்கநாயக்க அவர்கள் 2014 ஏப்ரல் 25 ஆம் திகதி இளைஞர் சேவைகள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட “தொலைபேசி திறன்களும் செயலாளர்களுக்கும் முன்னரங்கு உத்தியோகத்தர்களுக்குமான மனப்பாங்குப் பயிற்சி” தொடர்பான செயலமர்வில் பங்குபற்றினார்.

7. விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் 2014 திசம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் அபிவிருத்தி மையத்தினால் நடாத்தப்பட்ட “உங்களை வலுப்படுத்தல்” என்கின்ற தலைப்பில் ஆளுமை அபிவிருத்தி தொடர்பான செயலமர்வில் பங்குபற்றினார்கள்.

## 5. ஆராய்ச்சிப் புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் தொடர்பான விபரம் - 2014

| விடயம் | வெளியீடு | வணிகமாக்கப்பட்டவைகள் | முன்வைக்கப்பட்டவைகள் |
|---|---|---|---|
| ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை | -- | -- | 85 * |
| புத்தாக்கங்களின் எண்ணிக்கை | -- | -- | -- |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 04 | 04 | 04 |
| நூல்களின் எண்ணிக்கை | 03 | 03 | 03 |
| கட்டுரைகளின் எண்ணிக்கை | 73 | -- | 73** |
| ஏனையவை | -- | -- | -- |
| **மொத்தம்** | **80** | **07** | **165** |

* 33 - விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் வியாபார நிர்வாக முதுமானி பட்டத்தை நிறைவு செய்த மாணவர்களால் முன்வைக்கப்பட்ட விளக்கக் காட்சிகள்.

12 - விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி உதவி நிதியம் பெற்ற மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் தொடர்பான விளக்கக் காட்சிகள்.

40 - மீளாய்வாண்டில் தத்துவக் கலாநிதி மற்றும் தத்துவ முதுமானி பட்டங்களுக்காக மாணவர்களினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு விளக்கக் காட்சிகள்.

**73 - 24 சுவரொட்டிகள் உட்பட ஆண்டு மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கட்டுரைகள்.

## 6. நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளின் விபரங்கள் - 2014

| விபரம் | பங்குபற்றியோர் | நிறைவு செய்தோர் | பெற்றுக் கொண்டோர் |
|---|---|---|---|
| பட்டப்பின் படிப்புப் பட்டம் | 29 | -- | 29 |
| பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | - | - | - |
| பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | - | - | - |
| டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் | - | - | - |
| சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் | -- | -- | -- |
| பிரித்தெடுப்புக்கள் | 54*+24** | -- | 78 |
| பாட த்தியாயங்கள் | -- | -- | -- |
| விளக்கக் காட்சிகள் | 54*+24** | -- | 78 |
| செயலட்டைகள் | -- | -- | -- |
| பயிற்சி நிகழ்ச்சிகள் | 21 | | |
| செயலமர்வுகள் | 330 | 09 | |
| கருத்தரங்குகள் | 19 | | 19 |
| ஏனையவை(தயவு செய்து குறிப்பிடுக) | | | |
| மொத்தம் | 20+01 | | 116 |

* அழைக்கப்பட்ட விளக்கக் காட்சிகள் 05 உட்பட ** 24 வாய் மூல முன்வைப்புக்கள்

## 7. 2014 இல் நடைபெற்ற கருத்தரங்குகள், செயலமர்வுகள், பயிற்சி, விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் குறுங்கால பாடநெறிகள்

| இல. | நிகழ்வு/தலைப்பு | நிறுவகம் | பங்குபற்றியோர் தொகை | நடைபெற்ற திகதி/கள் |
|---|---|---|---|---|
| 1. | மண், தாவர, நீர் மற்றும் உரப் பகுப்பாய்வு | மண் விஞ்ஞான கல்வி சபை | 30 | பெப். 17-21 |
| 2. | பன்முக மாறி தரவுப் பகுப்பாய்வு | உயிரியல் புள்ளிவிபரவியல் கல்வி சபை | 53 | பெப். 24-26 |
| 3. | வருடாந்த உணவு பயிர் உற்பத்தியில் தர உறுதியளிக்கப்பட்ட விதை உற்பத்தித் தொழிநுட்ப அடிப்படைகள் | பயிர் விஞ்ஞான கல்வி சபை | 27 | பெப். 26, மார்ச் 01 |
| 4. | பன்முக மாறி தரவுப் பகுப்பாய்வு | உயிரியல் புள்ளிவிபரவியல் கல்வி சபை | 53 | மார்ச் 10-12 |
| 5. | தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | விவசாய விரிவு தொடர்பான கல்வி சபை | 51 | மார்ச் 14-16 |
| 6. | பரிசோதனை வடிவமைப்பும் பகுப்பாய்வும் | உயிரியல் புள்ளிவிபரவியல் கல்வி சபை | 24 | ஏப்பிரல் 28-30 |
| 7. | Analysis of Count & Rank Date Water Professionals Day Symposium | உயிரியல் புள்ளிவிபரவியல் கல்வி சபை | 39 | செப்தெ. 23-26 |
| 8. | நீர் துறைசார் தின மாநாடு | விவசாயப் பொறியியல் கல்வி சபை | 60 | ஒக்தோபர் 01 |
| 9. | உலக உணவு தினம் | விவ.ப.நி மற்றும் கண்டி லயன்ஸ் கழகம் | 125 | ஒக்தோபர் 16 |
| 10. | பயிர் பாதுகாப்பு நுட்பங்கள் | பயிர் பாதுகாப்பு கல்விச் சபை | 20 | நவம். 24 - திசெம். 5 |
| 11. | உங்களை வலுவூட்டுதல் | விவ.ப.நி மற்றும் பதவியணியினர் அபிவிருத்தி நிலையம் /பே.பல். | 33 | திசெம்.15-16 |




விவ.ப நிறுவக பதவியணியினர் "உங்களை வலுவூட்டுதல்" என்ற ஆளுமை அபிவிருத்தி செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர்.



தலைமைத்துவ பாடநெறி – குழு வேலை

## 8. 2014 இல் நடாத்தப்பட்ட குறுகிய பாடநெறிகள் பயிற்சி /அறிவுட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் செயலமர்வுகள் கருத்தரங்குகள் தொடர்பான விபரங்கள்

| இலக்கம். | நிகழ்ச்சி/ தலைப்பு | (பீடம்/ திணைக்களம்/நிலையம் / பிரிவு) ஒழுங்கமைக்கப்பட்ட | பங்குபற்றியோர் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| இல்லை | | | | |

## 9. 2014 இல் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களும் கையொப்பமிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைகளும்

| இலக்கம் | நிறுவகம் | (பீடம்/ திணைக்களம்/நிலையம் / பிரிவு/ பேராதனை பல்கலை.) | தலைப்பு | கையொப்பமிட்ட திகதி |
|---|---|---|---|---|
| இல்லை | | | | |

## 10. 2014 இல் பதவியணியினர் மற்றும் மாணவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | பதவியணியினர் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்ளூர் விருதுகள் | 14 | | 14 |
| தேசிய விருதுகள் | 01 | 03 | 03 |
| சர்வதேச விருதுகள் | 01 | | 01 |
| ஏனையவை | - | | |
| மொத்தம் | 16 | 02 | 16 |

விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட விருதுகள் பற்றிய இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

2014 இல் நடைபெற்ற தேசிய விஞ்ஞான மன்றத்தின் (NSF) ஆராய்ச்சி விருது வழங்கல் - 2013 விழாவில் பேராசிரியர். டப்.ஏ.ஜே.எம் கொஸ்தா மற்றும் கலாநிதி (செல்வி) ஏ.ஆர்எப்.சஹ்ரா பயிர் விஞ்ஞான கல்விச் சபை மற்றும் கலாநிதி (செல்வி) டி.எம். கொஸ்தா தாவரப் பாதுகாப்பு கல்வி சபை ஆகியோர் அவர்களின் ஆராய்ச்சி தலைப்பான 'Expression of candidate genes for salt tolerance in Sri Lankan rice germplasm' இற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினால் சான்றிதழ்களும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன. இந்த ஆராய்ச்சிக்காக தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் உயிர் தொழில்நுட்பம் மற்றும் மரபணு பொறியியல் சர்வதேச நிலையம் (ICGEB) இத்தாலி என்பவற்றினால் நிதி உதவியளிக்கப்பட்டிருந்தது.

பயிர் விஞ்ஞான கல்விச் சபையில் கலாநிதி பட்டப்பின் படிப்பிற்காக பதிவு செய்துள்ள செல்வி ஜே.ஏ.எஸ். சத்துரிக்கா என்ற மாணவி ஐக்கிய அமேரிக்க சர்வதேச போசாக்கு நிறுவகத்தினால் 2014 இற்கான புலமைப் பரிசில் விருது கிடைக்கப்பெற்றிருந்தது. 30 மாணவர்களில் ஒருவரான அவர் உலகம் முழுவதும் காணப்படும் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் துறையிலுள்ள மிகவும் தகுதியான மாணவர்களுடன் போட்டியிட்டே இந்த விருதை பெற்றுக்கொண்டார்.

## 11. 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கபட்ட புதிய பாடநெறிகள்

## தன்னுடைய 30 மாணவர்கள் ஒன்று இ இந்த சர்வதேச விருதை

2014 ஆம் ஆண்டில் இரண்டு புதிய பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது தோட்டக்கலையில் முதுமானிப் பட்டம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முதுமானிப் பட்டம் என்பவற்றிற்காகும். இந்த இரு பாடநெறிகளும் 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மாணவர்கள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் 2015 பெப்ரவரி 20 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளது.

## 12. வருடாந்த மாநாடு - விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2014




2014 இன் வருடாந்த மாநாட்டின் ஆரம்பம்

நிறுவகத்தின் வருடாந்த நாட்காட்டியில் அனைவரதும் கவனத்தை ஈர்க்கக் கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டமாகவுள்ள நிறுவகத்தின் வருடாந்த மாநாடு, உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிறுவகத்தின் கல்விசார் ஆளனியினர் மற்றும் மாணவர்கள் பங்குபற்றி அவர்கள் தமது ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மூலமாகப் பெற்றுக்கொண்ட அறிவு, அனுபவம் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கும் அவற்றைப் பரிமாறிக் கொள்வதற்கும் முக்கியமான ஒரு தளமாகக் காணப்படுகின்றது. இந்நிகழ்ச்சி 2014 நவெம்பர் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் பிராந்திய பிரதிநிதி கலாநிதி ஸ்டெவ்.ஜே.ஸ்டால் இன் தலைமையில் மிகப் விமரிசையாகக் கண்டியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நிறுவக ஆராய்ச்சியாளர்களாலும் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், கொரியா, இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இருந்து பங்குபற்றிய ஆராய்ச்சியாளர்களாளும் 24 சுவரொட்டிகள் அடங்கிய 73 விளக்கக்காட்சிகள் சமர்ப்பிக்கப்பட்டன.

பின்வரும் மாணவர்கள் சிறந்த சமர்ப்பணங்களைச் சமர்ப்பித்தாக 26 ஆவது வருடாந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

**செல்வி. எம்.என்.டி.எப். அபேகோன்** - கால்நடை மரபணு வளங்களின் பல்வகைத்தன்மை பற்றிய மதிப்பீடு

**செல்வி. ரனித்ரி அபேகோன்** - உணவு, பாலூட்டல் மற்றும் போசாக்கு

**செல்வி. என்.எஸ். விதானகே** – நீர் வளங்கள் முகாமைத்துவம்

**செல்வி. டப்.ஏ.டி. ஜயவர்தன** - மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பம்

**திரு. எம்.எஸ்.எல்.ஆர்பீ.மாரசிங்ஹ** - உயிரியல் முறைமை பொறியியல் தொலையெறிதல் நுட்பம்

**எச்.ஏ.ஆர்.கே. ஜயவர்தன** – விவசாயப் பொருளியல், தாவர வளர்ப்பு மற்றும் அறுவடைத் தொழில்நுட்பம்




விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளரிடமிருந்து சிறந்த முன்வைத்தலுக்கான விருதை பெறுகின்றார்

**செல்வி. எம்.டி.கல்பகே** - தாவரப் பாதுகாப்பு

**திருசம்சன் அன்கரஹ்** - புள்ளிவிபரவியல் மற்றும் பொருளியல்

**திரு.ஆர்.பீ.லியனகே** - விவசாய மரபணு வளங்களின் முகாமையும் மேம்பாடும்

**செல்வி. ஆர்.எம்.எஸ்.விஜேரத்ன** – விவசாய விரிவாக்கல் கல்வி

**செல்வி. ஈ.எம்.ஹேரத்** - சுவரொட்டி முன்வைப்பு

**திரு.ஆர்.பீ.லியனகே** - சிறந்த முன்வைப்பாளர்

26 ஆவது வருடாந்த மாநாட்டில் விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் கூடுதலான GPA புள்ளிகளை பெற்ற விவசாய உயிரியல் கல்வி பீடத்தின் செல்வி.ஆர்.என்.நவரத்னவிற்கு ஜோகிம் ஞாபகார்த்த விருது வழங்கப்பட்டது.

# 13. பொது நிர்வாகம்

### 13.1 திரு.ஆர்.பீ.லியனகே - விவ.பட்.நிறு 26 ஆவது வருடாந்த மாநாட்டில் அதி சிறந்த முன்வைப்பு



த எய்துவதற்கு ஆரம்ப தேவைகளாகவுள்ள சிறந்த கற்பித்தல், கற்றல் மற்றும் பௌதீக சூழல் போன்றவை அடிப்படை தேவையாக இருப்பதால் அவ்வசதிகளை மேம்படுத்துவதற்கு விவசாய விஞ்ஞான பட்டப்படிப்பு நிறுவகம் முன்னுரிமை வழங்குகின்றது. ஆதலால் மீளாய்விற்கு உட்பட்டுள்ள ஆண்டில் இந்நிறுவகம் அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட மூலதன நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி பின்வரும் நிர்மாணப் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி அதனை அமைக்கும் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆரம்ப திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசினால் வழங்கப்பட்ட நிதிகளிலிருந்து அச்செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாதிருந்ததுடன், அதற்காக மேலும் அதிகளவு நிதியை நிறுவக நிதியங்கள் மூலம் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. இது வரையிலும் அச் செயற்திட்டங்களுக்காக நிறுவக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. 01 ஆம் இலக்க கட்டிடத்தில் மலசலகூட அலகு மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பனவற்றை புதுப்பித்தல் மற்றும் நிர்மாணித்தல்.
2. சிறாப்பரின் அறைக்கான மேவுகை பொறுத்துதலும்.
3. பூங்கா அலங்கார திட்டமொன்றும் திட்ட வரைபுகளை தயாரித்தலும் திட்டமிடுதலும்
4. 02 ஆம் இலக்க கட்டிடத்தின் கூரையை நிர்மாணித்தல்.
5. ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கான விடுதி தொகுதியொன்றை அமைத்தல்.
6. உணவு ஆய்வு கூடமொன்றை நிர்மாணித்தல்.

நிறுவகத்தினால் உணவு ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. எனினும் பொருத்தமான இடவசதி இன்மையினால் அதன் நிர்மாணிப்பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும், உணவு ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்குப் பதிலாக பொது ஆய்வு கூடம் ஒன்றை நிர்மாணிப்பது பட்டப்பின் கல்வி நிறுவக மாணவர்களுக்கும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கும் பயனுறுதி வாய்ந்ததாக அமையும் என நிறுவகம் உணர்ந்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் பட்டப்பின் கல்வி நிறுவக மாணவர்களுக்கும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கும் பொது ஆய்வு கூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான செயற்றிட்டத்தை தாபிக்க வேண்டியுள்ளது.

மேலும், விசேடமாக ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களும் வெளிநாட்டு மாணவர்களும் பயன்படுத்துவதற்காக விவிபபி (PGIS) நிறுவனத்தின் அனைத்து நிர்மாணப் பணிகளிலும் ஆலோசகராக வழங்கும் மத்திய மாகாண கட்டடத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க, மீவதுரவில் உள்ள விவசாய விஞ்ஞானத் பொறியியல் திணைக்களத்தினால் கையளிக்கப்பட்ட பழைய கட்டிடத் தொகுதியைப் புதுப்பிப்பதற்கும் நிறுவகம் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அத்திட்டம் கைவிடப்பட்டதுடன், விவிபபிநி PGIA, பணிப்பாளர் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட விபபிபநி

(PGIS) இற்கு அடுத்து அமைந்துள்ள காணியில் விடுதி கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான முதற் கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வழமை போல் மீளாய்வாண்டிலும் வகுப்பறைகள், விரிவுரை மண்டபங்கள், மாநாட்டு மண்டபம் போன்றவற்றில் கற்பித்தல் மற்றும் கற்றல் சூழல் வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கருதத்தக்களவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 13.2 முகாமைத்துவத் தகவல் முறைமை (MIS):

விவிபபிநி (PGIA) இனது முகாமைத்துவ தகவல் முறைமை மெதுவாகவே தாபிக்கப்பட்டதாயினும், மிக உறுதியாகத் தொழிற்படுகின்றது. கொள்வனவு, மீளாய்வாண்டில் கணக்கீடு மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளை கணனி மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே நிறுவகத்தின் முறைமை பகுப்பாய்வாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பார்வையாளர்களுக்கு வசதியை ஏற்படுத்துவதற்காக முதமு விரிவாக்கப்பட்டுள்ளது. இது சகல மாணவர்களும் ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் முகாமைத்துவத் தகவல் முறைமையைச் சுலபமாக அணுக விரும்பும் வெளித்தரப்பினரும் இலகுவாக அணுகுவதற்கு உறுதுணையாக அமையும். இச்செயற்பாட்டிற்கான செலவினங்கள் விவிபபி (PGIA) நிறுவகம் ஈட்டிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டிற்கான கொள்வனவு திட்டம், கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. முகாமைத்துவக் குழு, இணைப்பாக்கக் குழு, கணக்காய்வுக் குழு போன்றனவற்றின் நியதிச் சட்டக் கூட்டங்கள் நிறைவடைந்துள்ளன. திட்டமிட்டபடி வருடாந்த பொருள் மெய்மையாய்வும் நிறைவடைந்துள்ளது. மீளாய்வாண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வினவப்பட்ட ஐயவினாக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடு களிற்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வி நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வதனைக் நிர்வகிக்கும் விதி மற்றும் பிரமாணங்கள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டு, முறைமையை வலுவூட்டுவதற்கும் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகத் தேவைக்கு ஏற்றவாறு புதிய பிரமாணங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆய்வு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்கும் அவற்றை உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கும் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

## 13.3 நலன்புரி மற்றும் ஓய்வு நடவடிக்கைகள்

விவிபபிநி (PGIA) மீளாய்வாண்டில் தனது வகிபங்கைப் புதுப்பித்து சமூகத்தில் மதிப்பிற்குரிய ஒரு நிறுவகமாகத் திகழுவதற்காக குறிப்பிட்ட எண்ணிக்கையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. 2014 மே 1 ஆம் திகதி கல்விசார் உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்பத்தினரும் பங்குபற்றிய சிங்கள தமிழ் புது வருடக் கொண்டாட்டங்கள் பேராதனைப் பல்கலைக்கழக மைதானத்தில் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது.

2. 2014 செப்தெம்பர் 9 ஆம் திகதி கண்டி வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் கலாநிதி சர்தா ஹேமபிரியாவினால் "தரமான வாழ்க்கைக்கான அறிவுறுத்தல்களும் ஆலோசனைகளும்" என்கின்ற தலைப்பில் சொற்பொழிவொன்று விவிபபிநி நலன்புரி பிரிவினால் நடாத்தப்பட்டது.
3. விவிபபிநி உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தினரும் 2014 பெப்ரவரி 2 ஆம் திகதி மெதிரிகிரியாவிலுள்ள சோமாவதி தூபிக்கு யாத்திரை மேற்கொண்டனர். இது

நிறுவகத்தின் பதவியணி உறுப்பினர்களினது குடும்ப அங்கத்தவர்களிற்கு இடையே நற்புணர்வைப் பேணுவதற்கான ஒரு வருடாந்த நடவடிக்கை ஆகும்.

## விளையாட்டு நடவடிக்கைகள்

முன்னைய ஆண்டுகளில் நடைபெற்றவாறே 2014 ஆம் ஆண்டிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் விவிபபிநி (PGIA) உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

1. பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த கிரிகெட் சுற்றுப் போட்டியில் சாம்பியன் கிண்ணத்தை விவிபபிநி PGIA உத்தியோகத்தர் அணி வென்றது.

2. மீளாய்வாண்டில் நடைபெற்ற அரச சேவை C பிரிவு கிரிகெட் சுற்றுப் போட்டியில் பல்கலைக்கழக கிரிக்கெட் அணியை திரு ரொஸான் புத்திக பிரதி நிதித்துவப்படுத்தியதுடன், சாம்பியன் கிண்ணத்தையும் அணி வென்றது.

## 14. விவசாய வாசிகசாலை

அட்டவணை 1. 2014 இல் வாசிகசாலைக்குப் பெறப்பட்ட ஏற்பாடுகள்

| | |
|---|---|
| PGIA ஒதுக்கீடு | ரூபா 500,000.00 |
| பீட ஒதுக்கீடு | ரூபா 383,172.82 |
| **மொத்தம்** | **ரூபா 883,172.82** |

புத்தககங்கள் கொள்வனவுகள்

2014 ஆம் ஆண்டில் வாசிகசாலைக்கு 241 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இதில் விவசாய பீடம் மற்றும் விவிபபிநி (PGIS) கல்விசார் பதவியணியினர் தமது கற்பித்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையானவை என விதந்துரைத்த புத்தகங்களும் அடங்கும்.

அட்டவணை 2. கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் விபரம்

| விபரம் | எண்ணிக்கை(கள்) | பெறுமானம் (ரூபா) |
|---|---|---|
| PGIA நிதியினால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் | 35 | 263,030.85 |
| பீடத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் | 30 | 409,540.22 |
| மொத்தமாகக் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் (PGIA மற்றும் பீடம்) | 65 | |
| சேர்க்கப்பட்ட PGIA ஆய்வு வெளியீடுகள் | 19 | |

அட்டவணை 3. நன்கொடைகள்

| விபரம் | எண்ணிக்கை(கள்.) | பெறுமானம் (ரூபா) |
|---|---|---|
| ஏனைய கொடை வள்ளல்களிடம் இருந்து கிடைத்த புத்தகங்கள் | 175 | 265,804.02 |
| மொத்தமாக சேர்க்கப்பட்ட புத்தகங்கள் (கொள்வனவு செய்யப்பட்டவை மற்றும் நன்கொடையாகக் கிடைத்தவை) | 241 | |

அட்டவணை 4: சஞ்சிகைகள்

| விபரம் | எண்ணிக்கை(கள்.) | பெறுமானம் (ரூபா) |
|---|---|---|
| PGIA நிதியினால் கட்டளை இடப்பட்ட சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 05 | 64,548.99 |
| பீடத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினால் கட்டளை இடப்பட்ட சஞ்சிகைகள் | 01 | 540.00 |
| **மொத்தமாகக் கட்டளை இடப்பட்ட சஞ்சிகைகள் (PGIA மற்றும் பீடம்)** | **06** | **65,088.99** |

2014 ஆம் ஆண்டு PGIA நிதியினால் ஐந்து சஞ்சிகைத் தலைப்புக்கள் வழங்கப்பட்டன. அவற்றுள் 02 வெளிநாட்டு சஞ்சிகைகள் ஆகும்.

| தலைப்பு | எண்ணிக்கை(கள்.) |
|---|---|
| பட்டப்பின்படிப்பு மாணவர்கள் | 1064 |
| பட்டப்படிப்பு மாணவர்கள் | 1217 |
| கல்விசார் பதவியணியினர் (நிரந்தர) | 228 |
| கல்விசார் பதவியணியினர் (தற்காலிக) | 14 |
| உதவி மற்றும் தொடர்புடைய சேவைகள் | 06 |
| குறுகிய கால வாசிகசாலை பாவனையாளர்கள் | 46 |
| **மொத்தம்** | **2575** |

<u>வாசிகசாலை புத்தகப் பாவனை</u>

2014 ஆம் ஆண்டு மாணவர்கள் விரிவுரையாளர்களிடையே மொத்தமாக 5356 புத்தகங்கள் பாவனைக்குட்படுத்தப்பட்டன.

<u>வாசிகசாலைகளுக்கு இடையே இரவல் அடிப்படையில் புத்தகங்களை பரிமாற்றதல்</u>

இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களின் மாணவர்களின் வேண்டுகோளின் பேரில் ஏனைய வாசிகசாலைகளிலிருந்து கடன் அடிப்படையில் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 13 கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றிருந்தன. இந்த 13 வேண்டுகொளில் 03 கடிதங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய நூலகங்களிலிருந்து 26 கோரிக்கைகுளும் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதன் பிரகாரம் ஏனைய நூலகங்களிற்கு 04 கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

<u>*AGRINET (விவசாய தகவல் வலையமைப்பு) உள்ளடக்கப்பக்க சேவை*</u>

இலங்கை விவசாய நிறுவகங்களிலுள்ள விஞ்ஞானிகளினதும் ஆய்வாளர்களின் நன்மைகளிற்காக (NARS விஞ்ஞானிகள்) சஞ்சிகைகளின் உள்ளடக்கப்பக்கங்கள் AGRINET உள்ளடக்கப்பக்க சேவை இலங்கை விவசாய வாசிகசாலைகளிற்கிடையே விநியோகிக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய வாசிகசாலை 18 சஞ்சிகை உள்ளடக்கப் பக்கங்களை விஞ்ஞானிகளுக்கு விநியோகித்துள்ளது.

<u>இலக்கிய ஆய்வு</u>

CAB CD- ROM தரவு தளம் பீடத்திலும் PGIA இலும் உள்ள மாணவர்களினால் இலக்கிய ஆய்விற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டில் எழுபத்தாறு (76) CAB ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

<u>பராம்பரிய விவசாய ஆய்வு விற்பனை/ பரிமாற்றம்</u>

PGIA சஞ்சிகையாகிய “பாரம்பரிய விவசாய ஆய்வு” இனது விற்பனை நடவடிக்கைகள் வாசிகசாலையினால் கையாளப்படுகின்றது.

2012 ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்ட பிரதிகள் (முழுப் பதிப்புக்கள்) - 13
ஏனைய நிறுவனங்களுடன் பரிமாறப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை - 12
(பிரசுரத்திற்காக)

<u>ஏனைய வாசிகசாலை கூட்டு செயற்பாடுகள்</u>

வெளிவாரிக் குழுவொன்றினால் (பேராதனைப் பல்கலைக்கழக பதவியணியினர் குழாம்) பாரிய இருப்பு மெய்மையாய்வு ஒன்று 24.07.2014 தொடக்கம் 11.08.2014 வரை நடைபெற்றது.

**விவசாய வாசிகசாலையின் இலத்திரனியல் பரிமாற்ற முறைமையின் ஆரம்பம்**

"அலிஸ்" வின்டோஸ் மென்பொருளைப் பயன்படுத்தி விவசாய வாசிகசாலையின் இலத்திரனியல் பரிமாற்ற முறைமையின் ஆரம்ப நிகழ்வு 2014 நவெம்பர் 13 ஆம் திகதி நடைபெற்றது. இதன் நன்மை யாதெனின், இலத்திரனியல் பரிமாற்ற முறையானது பௌதீக ரீதியான பரிமாற்ற முறையை விட செயற்றிறனானதாகும்.

## 15. நிதிச் செயலாற்றுகை

### 15.1 மீண்டுவரும் செலவின விபரம்

| விடயம் | 2012 (ரூபா) | | 2013 (ரூபா) | | 2014 (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது |
| | **44,764,000** | 39,408,203 | **41,203,000** | 39,911,697 | **50,445,000** | 46,896,435 |
| (அ) தனிப்பட்ட பதவியணி போக்குவரத்து | **255,000** | 69,593 | **100,000** | 97,158 | **900,000** | 92,045 |
| (ஆ) பிரயாணச் செலவினம் | **3,173,000** | 2,992,028 | **3,625,000** | 3,362,729 | **3,990,000** | 3,851,235 |
| (இ) வழங்கல் | **1,451,000** | 737,389 | **985,000** | 1,239,819 | **1,400,000** | 1,019,205 |
| (ஈ)பராமரிப்பு சேவைகள் | **6,076,000** | 5,158,518 | **5,635,000** | 5,448,947 | **8,840,000** | 6,766,142 |
| (ஊ) ஏனையவைகள் | **19,910,000** | 9,598,707 | **18,290,000** | 19,021,554 | **22,480,000** | 35,069,716 |
| மொத்தம் | **75,629,000** | 57,964,438 | **69,838,000** | 69,081,905 | **88,055,000** | 93,694,777 |

| நிதி வழங்கல்: | 2012 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| அரச மானியம் | **15,400,000** | | **19,000,000** | | **16,080,000** | |
| சதவீதமாக | **20%** | | **27%** | | **18%** | |
| ஈட்டப்பட்ட நிதி | **60,229,000** | | **50,838,000** | | **71,975,000** | |
| சதவீதமாக | **80%** | | **73%** | | **82%** | |

மீண்டுவரும் செலவினத்தின் கூறுகள் - 2014




னிப்பட்ட பதவியணி போக்குவரத்து

நிறுவகத்திற்கு 2014 ஆம் ஆண்டில் திறைசேரி மீண்டுவரும் செலவினமாக ரூபா 16.08 மில்லியன் ஒதுக்கீடு செய்ததுடன், ரூபா 9.0 மில்லியனை மூலதன செலவினமாக ஒதுக்கீடு செய்தது. இது கடந்த வருட ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 30. மில்லியன் மற்றும் ரூபா 0.2 மில்லியன் குறைவாகும். இவ்வருடத்திற்கான மொத்த உள்ளபடியான மீண்டுவரும் மற்றும் மூலதன செலவினம் முறையே ரூபா 94.05 மில்லியன் மற்றும் ரூபா 15.67 மில்லியன் ஆகும். மொத்த மீண்டுவரும் செலவினம் ஆரம்பத்தில் ஈட்டப்பட்ட நிதி (82%) இலிருந்து பெறப்பட்டதடன் எஞ்சிய பெறுமானம் அரச மானியத்திலிருந்து (18%) பெறப்பட்டது. 50.24% ஆன மீண்டுவரும் செலவினம் நிரந்தர பதவியணியினருக்கும் வருகைதரு விரிவுரையாளர்களிற்கான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் போன்ற தனிப்பட்ட கொடுப்பனவுகளிற்காக செலவிடப்பட்டது. பாடநெறி உபகரணங்கள், விசேட சேவைகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான போக்குவரத்து மானியங்கள் மற்றும் வருடாந்த மாநாடுகள் போன்ற ஏனைய மீண்டுவரும் செலவினங்களிற்கான மொத்த மீண்டுவரும் செலவினத்தின் 37.29% ஆகும். மேலேயுள்ள வட்ட வரைபில் மீண்டுவரும் செலவினத்தின் கூறுகள் தரப்பட்டுள்ளன.

## 15.2 மூலதன செலவினத்தின் விபரம்

| விடயம் | 2012 (ரூபா) | | 2013 (ரூபா) | | 2014 (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது | ஒதுக்கப்பட்டது | உள்ளபடியானது |
| (அ) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 2,000,000 | 2,988,881 | 2,500,000 | 3,976,203 | 6,050,000 | 7,623,417 |
| (ஆ) ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவு | - | 667,520 | - | - | 1,600,000 | 1,340,392 |
| (இ) கட்டடங்களை புதுப்பித்தலும் புணர்நிர்மாணம் செய்தலும் | 7,800,000 | 267,937 | 6,706,000 | 8,430,449 | - | 4,929,799 |
| (ஈ)மோட்டார் வண்டி கொள்வனவு | - | 8,350,000 | - | - | 350,000 | 389,831 |
| (உ) ஏனைய வாசிகசாலை உபகரணங்கள் சஞ்சிகைகள் கொள்வனவு | 1,500,000 | 8,023 | - | 996,409 | 500,000 | 1,058,161 |
| (ஊ) விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | | | | | 500,000 | - |
| (ஒ) தொலைபேசி முறைமை கொள்வனவு | | | | | - | 426,328 |
| மொத்தம் | **9,800,000** | **12,282,361** | **9,206,000** | **13,403,062** | **9,000,000** | **15,767,929** |



**2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காகப் பின்பற்றப்பட்ட குறிப்பிடத்தகுந்த கொள்கைகளின் சட்டரீதியான அறிக்கையும் வெளிப்படுத்துகையும்**

1. பொதுவானவை

2014 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுற்ற நிதியாண்டிற்கான விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 1979 இன் 09 ஆம் இலக்க விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளைச் சட்டத்தின் 12(3)(இ) மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 106(1) மற்றும் 107(ஆ) பிரிவும் அத்தோடு அதற்கு பின்னர் விதிக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் திருத்தப்பட்ட 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2. **முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

2.1 **கணக்கீட்டு அடிப்படைகள்**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஏனைய பொருத்தமான இலங்கை கணக்கீட்டுப் நியமங்களுக்கமைவாகவும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுப் பிரமாணத்தின் 2009 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முதற் பதிப்பிற்கமைவாகவும் 2012 ஆம் ஆண்டில் வெளிடப்பட்ட இரண்டாம் பதிப்பின் பிரகாரமும் முதற்பதிப்பு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பட்டன.

நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களாவன 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் நியமச் சட்டத்தின் நிபந்தனைகளின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீட்டுப் பிரமாணங்களுடன் ஒருங்கிணைந்த வரலாற்று ரீதியான கிரய மரபு முறைகளுக்கமைவாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாக் கணக்கீட்டுக் கொள்கைகளும் தொடர்ந்தும் கடந்த வருடத்துடனான கொள்கைகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருந்தன. தேவைப்படும் பட்சத்தில் நடப்பு வருட முன்வைத்தலின் மாற்றங்களுடன் இணங்கும் வகையிலே ஒப்பீட்டு ரீதியான தொகைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. கணக்கீட்டில் தாக்கம் செலுத்துகின்ற பணவீக்கக் காரணிகளுக்காக எந்தவித ஒழுங்கும் செய்யப்படவில்லை. வெளிக்களப் ஆராய்ச்சிகளுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் காசு அடிப்படையில் கணிக்கப்பட்டிருந்தன.

3. **ஆதனங்கள், பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள்**

3.1 ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்கள் கொள்விலையில் விலையில் குறிக்கப்பட்டிருந்ததுடன் 1995 ஒக்டோபர் 5 ஆம் திகதிய 649 ஆம் இலக்க UGC சுற்றுநிருபம் மற்றும் LKAS 16 ஆகியவற்றின் பிரமாணங்களுக்கமைவாக றெமானத் தேய்வொதுக்கம் வழங்கப்பட்டிருந்தது. நிதி நிலைமைக் கூற்றில் தேய்வொதுக்கமானது நேர் கோட்டு ரீதியில் தேய்விடப்பட்டிருந்தது.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான தேய்வொதுக்க வீதமானது UGC சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கமைவாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | வருடத்திற்கான தேய்வொதுக்கம் வீதம் (%) |
|---|---|
| கட்டிடம் மற்றும் கட்டடி அமைப்புக்ளும் | 05 |
| காரியாலய உபகரணங்கள் | 20 |
| வீடமைப்புத் திட்ட உபகரணங்கள் | 20 |
| தனபாடம் மற்றும் பொருத்திகள் | 10 |
| ஆய்வுகூட, கற்பித்தல் மற்றும் காரியாலய உபகரணங்கள் - | 20 |
| மோட்டார் வாகனங்கள் | 20 |
| வாசிகசாலைப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 20 |
| வீடமைப்புத் திட்டங்கள் | 10 |

ஒரு சொத்தின் தேய்வானது அப் பொருள் பாவனைக்காகத் தயார் நிலையில் உள்ள போது ஆரம்பமாவதுடன் சொத்தின் விற்பனை நிர்ணயக் கால ஆரம்பத்தில் முடிவடைகிறது.

பூச்சியப் பெறுமானத்தைக் கொண்டிருந்த நிலையான சொத்துக்கள் 2015 ஜனவரியில் பின்னர் ரூபா. 58,651,102.32 பெறுமதியில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்படும்.

ரூபா. 35,059,653.74 புத்தகப் பெறுமானத்துடைய வாசிகசாலை உபகரணங்களின் பௌதிக மெய்மையாய்வானது உப வேந்தரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்பட்டதுடன் அதன் ஆரம்ப அறிக்கை 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இச் செயற்பாட்டின் இணைப்பாளராகவிருந்த பேராதெனிய பல்கலைக்கழக நூலகரினால் சமர்ப்பிக்கப்பட்டது. ஒரு உப குழுவினை நியமித்து இச் செயற்பாட்டினை நிறைவுசெய்ய முகாமைத்துவக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் காணாமற் போன நூலக உபகரணங்கள் தொடர்பிலான திருத்தங்களை நிதிப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளுக்கமைவாக எதிர்காலத்திலே மேற்கொள்ளப்படும்.

3.2 நிறுவனத்தின் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் உரிமை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமாகச் செயற்படுவதனால் PGIA யிற்குச் சட்டபூர்வமாகக் கையளிக்கப்படவில்லை. இதனால் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது நிலத்தின் பெறுமதி கருத்திற் கொள்ளப்படவில்லை.

4. நடைமுறைச் சொத்துக்கள்

ஐந்தொகையிலே நடைமுறைச் சொத்து எனக் குறிக்கப்படுவது காசு மற்றும் வங்கி மீதி என்பவற்றுடன் சாதாரண நடைமுறைச் செயற்பாட்டிலே அல்லது பதிவுத் தினத்திலிருந்து ஒரு வருட காலத்தினுள் பணமாகக் கூடிய அனைத்தையும் குறிக்கும்.

4.1 பொருட்பதிவு/இருப்பு

பொருட்பதிவு/இருப்பு ஆகியன உண்மைக் கிரயத்தின் அடிப்படையிலே மதிப்பிடப்படுகின்றன. பொருட்பதிவுக் கிரயமானது முதலில் உள்வருதல் முதலில் வெளியேறுதல் நியதியின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகிறது. கணக்கீட்டிலே காட்டப்பட்டுள்ள இருப்பு மீதியானது பௌதீக ரீதியிலே உண்மைப்படுத்தப்பட்டுள்ளது.

4.2 வியாபாரம் மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளில் தீர்வையாகக்கூடிய (கிடைக்கக்கூடிய) தொகைகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளதுடன் தேவைக்கேற்ப நிதிக்கூற்றுக்களில் அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக்கடனுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

3. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
4. උපකුලපති - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. } சிஎல்-1/கேடி/ஜே/பிஜீஐஏ/01/2014/04    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2015 ஆகஸ்ட் 11

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்

பணிப்பாளர்,

**விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) உபபிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1979 திசெம்பர் 26 ஆம் திகதிய 68/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் 20 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு, 108 மற்றும் 111 பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2015 மார்ச் 25 ஆந் திகதி நிறுவகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியம இலக்கம் 01 மற்றும் 92 பிரிவின் பிரகாரம் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற, எனினும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக உள்ள ரூபா 88,136,603 கிரயத்திலான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அலுவலக உபகரங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,800,000 தொகையான கணனி தகவல் முறைமை அருவச் சொத்தாக கணக்கீடு செய்து காலக்கழிவாக பதிவழித்தல் நிறுவகத்தின் கொள்கையாக இருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் ரூபா 27,159,533 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| அட்டுறு செலவினங்கள் | 1,094,418 | பட்டோலைகள் |
| பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் | 1,188,468 | பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் |
| முன்கொண்டு வரப்பட்ட பாடநெறிக் கட்டணங்கள் | 24,114,499 | - மேற்படி - |
| 05 உத்தியோகத்தர்களுக்கான ஆராய்ச்சிப் படிகள் கொடுப்பனவு | 762,148 | அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவு |
| | 27,159,533 | |

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

1974 முதல் 2004 காலப்பகுதியல் மாணவர்களால் விஞ்ஞான வைப்பக்கள் மற்றும் நூலக வைப்புக்களாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 280,010 தொகையை விடுவிப்பதற்கோ அல்லது நிறுவகத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | இணங்காமை |
| --- | --- |
| (அ 1974 இன் 02 ஆம் இலக்க விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வழிகாட்டல்களின் | |
| (i) 14 ஆம் பந்தி | கல்விச் சபை, நிறுவகத்தின் பணிப்பாளர் உட்பட உறுப்பினர்களின் எண்ணிக்கை 09 ஐக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், கல்விச் சபைகளில் உறுப்பினர்களின் பங்குபற்றுகை திருப்திகரமாக நிலைமையில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) 14 (7) உப பந்தி | கல்விச்சபை கூட்டங்கள் ஓராண்டில் ஆகக் குறைந்தது 06 கல்விச்சபை கூட்டத்தொடர்களேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் விவசாய, பொருளாதார கல்விச் சபையிலும் உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைய சபையிலும் 05 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய பிர/தாபன/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதம் | கல்விசார் படிகள், வாழ்க்கைச் செலவினப் படியாக கருத்திற்கொள்ளப்பட முடியாத போதிலும், இப்படிகளை ஊழியர் சேமலாப நிதியம், ஒய்வூதிய நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றிற்கு பங்களிப்பிற்கு எடுத்துக்கொள்ள முடியாத போதிலும். அதற்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்த |

| | |
|---|---|
| | காரணத்தினால் நிறுவகத்தின் கல்விசார் பதவியணியினருக்காக மேற்படி நிதியங்களுக்கு ரூபா 61,940 பங்களிப்புத்தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6 ஆம் பிரிவுகள் | பிரயாணம் முடிவடைந்து 30 நாட்களுக்குள் பிரயாணச் செலவின விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், தாமதித்து சமர்ப்பிக்கப்படுகின்ற பிரயாணச் செலவின விண்ணப்பப்பத்திரங்களுக்காக 28.6 ஆம் பந்தியின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் 10 சந்தர்ப்பங்களின் போது தாமதமாக சமர்ப்பித்திருந்த பிரயாணச் செலவின விண்ணப்பங்களிலிருந்து ரூபா 18,726 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் I ஆம் பகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் II ஆம் பகுதியின் IX ஆம் அத்தியாயம் | வழமையான கடமைகளுக்கு புறம்பான செயற்பாடொன்றான இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் வழமையான கடமை நேரத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுமாயின் மேலதிக நேரமோ அல்லது விடுமுறை தினக்கொடுப்பனவோ மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அவ் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது வழமையான கடமை நேரக்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 2013 ஆம் ஆண்டின் இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகளுக்காக இருப்பு மெய்மையாய்வுச் சபையின் 06 உத்தியோகத்தர் களுக்காக ரூபா 79,090 தொகை இருப்பு மெய்மையாய்வு படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

(உ) பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதி

(i) VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இல் (ii) மற்றும் (iii)

தமது கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் வேலைகளுக்காக உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதமான பகுதியை தாம் உரித்தாகும் உயர் கல்வி நிறுவகத்திற்குச் செலுத்த வேண்டிய போதிலும், நிறுவகம் மீளாய்வாண்டில் செலுத்திய ரூபா 13,169,959 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 1,316,996 ஐ நிறுவகத்தின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) IX ஆம் அத்தியாயத்தின் 2 இன 2.2

குறிப்பாக இனங்காணப்பட்ட கடமை நேரத்திற்குப் புறம்பானதும், அவசரமானதும், வழமையான கடமை நேரத்தில் செய்ய முடியாத வேலைகளுக்கே மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்த முடியுமாக இருந்த போதிலும், நிறுவகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கடமைப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவுகளாக மீளாய்வாண்டினுள் ரூபா 2,094,403 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

-----------------------------------------------------

(i) நிதிப் பிரமாணம் 371

செயல் நிமித்த உப கட்டுநிதி தேவையான செயற்பாட்டிற்கு போதியளவு கட்டுநிதியே வழங்க முடியுமாக இருந்த போதிலும், 11 சந்தர்ப்பங்களின் போது செலவினங்களை தீர்ப்பதற்கு தேவையான அளவிற்கு மேலதிகமாக ரூபா 69,658 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 371(2) | செயல் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 95,000 ஆன முற்பணங்கள் 01 மாத முதல் 11 மாதங்கள் வரையான கால தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன. |
| (எ) 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தொகுதி இலக்கம் V | அமைச்சு செயலாளரின் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் தனிப்பட்ட உதவியாளருக்கு தொலைபேசிச் செலவினமாக ரூபா 20,781 தொகை மீளாய்வாண்டின் போது மீள்நிரப்பப்பட்டிருந்தது. |
| (ஏ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 09 ஆம் பந்தி | மனிதவள பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 02,03,04,05,06 ஆம் பிரிவுகள் | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், ரூபா 18,755,469 கூட்டுத்தொகையான கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1528/(A) ஆம் இலக்கம் மற்றும் 2014 யூலை 01 ஆந் திகதிய கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2014 யூலை மாதம்

17 ஆந் திகதிய 07/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரை விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 45 உத்தியோகத்தர்களுக்கு படிகளாக ரூபா 1,186,537 தொகை திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 – 2017 ஆம் ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்காக விரிவுரையாளரொருவருக்கு முறையான அங்கீகாரமின்றி ரூபா 150,000 தொகை கௌரவ கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய பீஈ 1/174 11-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் ஆகிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினுள் காணப்படும் நிறுவகங்களில் கடமைகள் புரிவதற்காக பல்கலைக்கழக பதவியணியினருக்கு கொடுப்பனவு செய்யும் போது அமைச்சரவையினதும் திறைசேரியினதும் அனுமதியொன்று பெற்றுக்கொள்ளாமல் குறுகியகால பாடநெறி கூட்டிணைப்பு நடவடிக்கைகளுக்கான படிகள், விரிவுரைக் கட்டணங்கள் மற்றும் உதவியாளர்களுக்கான கொடுப்பனவு என மொத்தம் ரூபா 674,406 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 41,865,313 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 34,250,533 ஆக இருந்தமையால் முன்னைய ஆணடிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,614,780 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், ஏனைய மீண்டெழும் செலவினங்கள், ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு என்பன முறையே ரூபா 7,350,852 தொகை ரூபா 2,488,056 தொகை மற்றும் ரூபா 2,872,912 ஆல் செலவின அதிகரிப்பினை விட கூடுதலான வேகத்தில் உள்ளக உழைப்புக்கள் மற்றும் அரச மானியங்கள் அடிப்படையில் காலக்கழிவு முறையே ரூபா

24,311,860 ஆலும் ரூபா 2,333,639 ஆலும் அதிகரித்தமை அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 ஆம் ஆண்டின் நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யும் போது இனங்காணப்படாத ரூபா 280,255 பெறுமதியான 437 புத்தகங்கள் தொடர்பாகவும் மீளாய்வாண்டின் நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யும் போதும் மஹாஇலுப்பள்ளம நூலகத்தில் இனங்காணப்படாத 68 புத்தகங்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நலன்புரி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களும் நீர் மற்றும் மின்சார கட்டணங்களும் காலரீதியாக ஏற்படும் மாற்றங்களின் பிரகாரம் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

2014 ஆம் ஆண்டின் போது 07 பாடநெறிகளுக்கு மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி ரூபா 391,[illegible] பெறுமதியான அசைவுறாத இருப்புக்கள் மற்றும் ரூபா 36,218 தொகையான மெதுவாக அசையும் இருப்புகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையான காப்புறுதி மேவுகையின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டிருந்த ரூபா 800,000 பெறுமதியான வேன் வண்டி விபத்திற்குட்பட்டிருந்த போதிலும் அதற்குரிய இழப்புப் பெறுமதியை கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வின் போது ரூபா 358,456 பெறுமதியான 346 நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்ததாக கண்டறியப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினர் உறுதிப்படுத்தப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 18 ஆக இருந்த போதிலும், சாரதி மற்றும் தொழிலாளர் தரத்தில் 06 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கல்விசார் பதவியணியினரில் 10 பதவிகள் உட்பட 12 பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடங்களாக இருந்து வருவதுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டுத்திட்டமொன்றைத் தயாரித்து அத்திட்டத்தை வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பிவைக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டின் கூட்டிணைந்த திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள்

திணைக்களத்தின் அங்கீகாரம் 2015 சனவரி 31 ஆந் திகதியே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதின் செயன்முன்னேற்றத்தை கிரமமாக பரீட்சிப்பதற்காக நிறுவகத்தினால் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காததுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்எ/2009(1) ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய காலாண்டு மற்றும் ஆண்டறிக்கை உரிய திகதிகளில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டினுள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அனைத்துப் பகுதிகளையும் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன், மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் தொடர்பாக 02 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு குழுவின் மூலம் தமது அவதானிப்புக்களை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன்,

கணக்காய்வுக் குழுவின் பின்வரும் விடயங்கள் விடயப் பரப்பிற்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை நிச்சியப்படுத்திக் கொள்ளலும் வருடாந்த கணக்காய்வு திட்டத்தை மீளாய்வு செய்தலும்

(ஆ) நிறுவகத்தினுள் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்

(இ) ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக அவதானிப்புக்கள் உள்ளடக்கிய அறிக்கைகள்

(ஈ) பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்/ வழிகாட்டிகள் தொடர்பான மீளாய்வு

(உ) உள்ளக கணக்காய்வு / வெளியக கணக்காய்வு அறிக்கைகள் முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பான மீளாய்வும் தொடர் நடவடிக்கைகளும்

## 5.5 கொள்வனவுக் குழு

மீளாய்வாண்டிற்காக அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், குறைந்தது 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2 இன் பிரகாரம் வருடாந்த பாதீட்டு அறிக்கை ஆண்டின் ஆரம்பத்தின் போது நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு கருவியாகவும் பயன்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக பின்வரும் விடயங்கள் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதிடப்பட்ட செலவினத்தினையும் உள்ளவாறான செலவினத்தினையும் ஒப்பிடும் போது 07 செலவின விடயங்களில் ரூபா 3,041,000 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக குறை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் 31

செலவின விடயங்களுக்காக ரூபா 11,385,000 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக மிகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) பாதிடப்பட்ட வருமானத்தை, உள்ளவாறான வருமானத்துடன் ஒபபிடும் போது 13 வருமான விடயங்களுக்குரிய ரூபா 24,622,000 வருமானம் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஆய்வுகள் மானியங்களின் பயன்பாடு
(இ) நிதி முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் முகாமைத்துவம்
(உ) கொள்வனவு
(ஊ) நூலக நிர்வாகம்
(எ) பாடநெறி வழிகாட்டல் / முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

கணக்காய்வு விசாரணை : சீஎல்/கேடி/ஜே/டிஎப்/பிஜிஐஏ/ஏடீ/2014/04 திகதி 2016.02.15

கடித தொடர்பு : கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

விடயம் : கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014

---

2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி உங்களால் எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட 2015-08.20 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில் பின்வருமாறு.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம்

2014 ஆகஸ்ட் 1 ஆந் திகதி நடைபெற்ற 45 ஆவது கணக்காய்வு குழுக்கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அரச விலை மதிப்புத் திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட நூலகப் புத்தகங்கள் தவிர ரூபா 58,651,102 ஆன ஏனைய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக 2014.12.02 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் விலை மதிப்புத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் விலை மதிப்புத் திணைக்களத்தின் KD/நானாவித/014/A4 மற்றும் 2014.02.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கோரப்பட்ட சொத்துப் பதிவேடு 2015.01.23 ஆந் திகதி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டதன் பின்னர் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்தல் நடவடிக்கை 2015.03.12 ஆந் திகதி முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டது. அதன் பிரகாரம் மீள்மதிப்பீட்டு பெறுமதி உள்ளடக்கப்பட்ட முழுமையான அறிக்கை 2015.08.28 ஆந் திகதி நிறுவகத்திற்க கிடைக்கப்பெற்றதுடன், குறித்த பெறுமதி உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீள்மதிப்பீடு செய்வதற்குரிய கணக்கீட்டு சீராக்கம் 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் கணக்கு அறிக்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணனி தகவல் முறைமை அருவச் சொத்தாக வகைப்படுத்த முடியாதிருந்ததுடன், நிறுவகத்தின் கணக்கீட்டுக் கொள்கை மூலமும் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்படாமல் கொள்வனவாக நிறுவனம் கையேற்றுள்ள முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) அலுவலக உபகரங்களின் கீழ் கணக்கீடு செய்து பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை
**அட்டுறு செலவினங்கள்** - 1,094,418

2014 ஆம் ஆண்டின் மொத்த அட்டுறு செலவினத்தின் அளவு ரூபா 27,489,400.32 இற்குரிய வெளிவாரி விரிவுரைக் கட்டணமாக அட்டுறுவாக்கப்பட்டிருந்த ரூபா 22,745,251 இற்காக பட்டோலைகள் மற்றும் நானாவித செலவினத்திற்கான ரூபா 4,744,149.32 தொகைக்குரிய பட்டோலைகள் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட ரூபா 1,094,418 பெறுமதிக்குரிய அட்டுறு உருப்படியொன்று இல்லாமை கண்டறியப்பட்டது.

பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் 1,188,468

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் மற்றும் யசுவா டெக் நிறுவனம், காணா என்பவற்றிற்கிடையே கைச்சாத்திடப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பிரயோக புள்ளிவிபரவியல் தத்துவியல் பட்டப்படிப்பு பின்பற்றுவதற்கு பதிவு

செய்யப்பட்ட 20 மாணவர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டிற்காக பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் பதிவுக் கட்டணங்களாக ரூபா 1,188,468 தொகை குறித்த பாடநெறி 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமையால் அப்பாடநெறிக் கட்டணம் முன்கொண்டுவரப்பட்ட கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டது.

முன்கொண்டு வரப்பட்ட பாடநெறிக் கட்டணங்கள் 24,114,499

முன்கொண்டு வரப்பட்ட கட்டணங்கள் தொடர்பான பட்டோலை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த பதிவேடு தேவையான போது கணக்காய்விற்காக சமர்ப்பிக்க முடியும்.

ஆராய்ச்சி படிகள் கொடுப்பனவு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013.01.08 ஆந் திகதிய 1000 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2014.05.28 ஆந் திகதிய மற்றும் 05/2014(ii) இலக்கம் கொண்ட தாபனச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சிப் படிகளுக்கு உரித்தான 05 உத்தியோகத்தர்களால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேரவை ஆராய்ச்சிகுழு (Senate Research Committee) விற்கு குறித்த முன்மொழிவை சமர்ப்பித்தன் பின்னர் குறித்த குழுவினால் வழங்கிய பரிந்துரையின் பிரகாரம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவின் 2014.08.20 ஆந் திகதிய மற்றும் AE/10 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பேராசிரியர் எஸ்.சமத அவர்களுக்கும் திருமதி ஐ. முதநாயக்க அவர்களுக்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா தாபனப் பிரிவின் 2014.10.24 ஆந் திகதிய மற்றும் E/10 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செல்வி. எஸ்.ஹேரத், திரு.எஸ்.பி.ஜயகொடி மற்றும் சீ. தஹநாயக்க அவர்களுக்கும் இந்த ஆராய்ச்சி படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், குறித்த ஆராய்ச்சி முன்மொழிவு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேரவை மற்றும் ஆராய்ச்சிக்குழுவின் மூலமாகவும் குழுவிற்கு பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞான வைப்புக்கள் மற்றும் நூலக வைப்புக்கள் பட்டோலையில் குறிப்பிடப்பட்ட 5438, 5793 மற்றும் 5854 ஆம் பதிவு இலக்கங்களுக்குரிய பதிவுசெய்யப்பட்ட திகதி முறையே 2005.10.29, 2005.11.10 மற்றும் 2005.11.05 ஆக மாற்றப்பட வேண்டும். அதன் பிரகாரம் நிறுவகத்தில் 2004 ஆம் ஆண்டு வரை பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் வைப்புத் தொகையை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பட்டப்படிப்பினை பூர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த காலஎல்லையை மிகைத்து சென்ற மாணவர்களுக்குரிய வைப்புத் தொகை அம்மாணவர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்து செலுத்தி விடுவிப்பதற்கு அல்லது நிறுவகத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 இன் 02 ஆம் இலக்க விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வழிகாட்டல்களின் முன்னைய ஆண்டுகளில் கல்விச் சபை உறுப்பினர்களின் பங்களிப்பிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் உறுப்பினர்களின் வருகை தெளிவான அதிகரிப்பொன்றைக் காண்பித்ததுடன், வருகை திருப்திகரமில்லாத அங்கத்தவர்கள் தொடர்பாக குறித்த கல்வி சபை செயலாளர்களுக்கு அறிவூட்டப்பட்டு அந்த உறுப்பினர்கள் கல்விக் குழுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ii) 14 (7) உப பந்தி**

நிறுவகத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம் ஒவ்வொரு கல்விச் சபையினாலும் ஆகக் குறைந்தது 06 கூட்டத் தொடர்களேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், விவசாய, பொருளாதார கல்விச் சபையிலும் உணவு விஞ்ஞான

மற்றும் தொழில்நுட்ப நிலைய சபையிலும் 05 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன என்பதை ஏற்றுக்கொள்வதுடன், எதிர்காலத்தில் அக்கூட்டங்களின் எண்ணிக்கை கள் மேவுகை செய்யப்படும் வகையில் கூட்டங்களை நடாத்துமாறு கல்விச்சபைகள் அறிவுறுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய பிர/தாபன/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதம்

பல்கலைக்கழகக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட 213 சனவரி 08 ஆந் திகதிய மற்றும் 1000 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

(இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6 ஆம் பிரிவுகள்

விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வெளிவாரி விரிவுரைகள் நடாத்தும் போது குறித்த விடயங்களின் விரிவுரைகள் பூர்த்தி செய்யப்பட்டு பரீட்சை நடாத்தி புள்ளிகள் வழங்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவு நவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதன் பிரகாரம் பிரயாணச் செலவினங்களை மீளளித்தல் பிரயாணம் முடிவடைந்த திகதி அல்லாமல் மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் கருத்திற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் 2015.07.24 ஆந் திகதிய 32 ஆம் இலக்க நிதிக்குழுக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட பரிந்துரை மற்றும் 2015.09.03 ஆந் திகதிய நடைபெற்ற 216 ஆம் இலக்க முகாமைத்துவ கூட்டத்தின் போது வழங்கப்பட்ட பரிந்துரை அடுத்த கணக்காய்வுக் குழுக் கூட்டத்திற்கு வழங்கி மேற்குறித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பனிவற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு தாமதக் கட்டணம் அறவிடாமல் இருப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படும்.

(ஈ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவையின் I ஆம் பகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி மற்றும் II ஆம் பகுதியின் IX ஆம் அத்தியாயம்

2013 ஆம் ஆண்டில் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வருடாந்த இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகளுடன் தொடர்பான பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது சாதாரணமான அங்கீகரித்த நடைமுறையான விடுமுறை தினக் கொடுப்பனவு மாலை நேர சேவை புரிவதற்காக வழங்க முடியாமையால் குறித்த கணிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பான உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்காக குறித்த செயற்பாடுகளுக்காக எடுக்கும் காலம் கருத்திற்கொள்ளப்பட்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவுகளுக்கு சாதாரண கௌரவக் படியொன்று (Honorarium Allowance) செலுத்துவதற்கு 2013.11.29 ஆந் திகதிய 203/17 ஆம் இலக்க முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவவாறாயினும் 2014 ஆம் ஆண்டிலிருந்து இதற்காக மேலதிக நேரமோ அல்லது விடுமுறை தினக்கொடுப்பனவோ மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதி VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இல் (ii) மற்றும் (iii) ஆம் பந்திகள்

(i) இந்நிறுவகம் அடிப்படையாக வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவைகளை பல்கலைக்கழகங்களில் சேவை புரியும் கல்விசபை பதவியணியினரால் வழங்கப்படுவதுடன், கூடுதலான விரிவுரைகள் விடுமுறை நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடாத்தப்படுகின்றது. அவ்வாறே அத்தியவசிய தேவைகளுக்காக தேவையான சந்தர்ப்பத்தில் மாத்திரம் வார நாட்களில் குறைந்தளவு விரிவுரைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே விரிவுரையாளர்களின் மொத்த உழைப்பில் 10% மற்றும் 16% சதவீதமாக இருப்பதால் உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிட வேண்டியிருப்பதால் எதிர்காலத்தில் இந்த அரசிறை அறவிடப்படும் நிபந்தனைகளிலிருந்து குறித்த உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்காக

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2015.03.27 ஆந் திகதி நடைபெற்ற 49 ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வாளரால் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ரூபா 13,169,959 பெறுமதியான அலுவலக நேரத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட விரிவுரைகளுக்குரிய பெறுமதி கணக்கிடப்பட்டு முழுமையான கணக்காய்வு பதிலொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**(ii) பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் II ஆம் பகுதி IX ஆம் அத்தியாயத்தின் 2 இன் 2.2**

இந்நிறுவகம் கூடுதலான விரிவுரைகளையும் செய்முறை நடவடிக்கைகளையும் வார இறுதி நாட்களில் என்பதால், அலுவலகம், விரிவுரை மண்டபம், கணனிப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் மற்றும் விவசாய பீடததின் ஆய்வுகூட வேைகள் என்பவற்றை தொடர்ந்தும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆதலால் அத்தியவசிய ஊழியர்களின் சேவை மாத்திரம் மேலதிக நேரமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப் வேண்டும். அவ்வாறே இதற்கு முன்னைய கணக்காய்வு அறிக்கைகள் மூலமும் பொதுக் கணக்கு குழுவின் பரிந்துரை மூலமும் சுட்டிக்காட்டப்பட்ட ஊழியர்களின் சம்பளத்தில் 35% எல்லை அடிப்படையில் மாத்திரம் மேலதிக நேர வேலை கொடுப்பனவு செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ஊ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 371**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டைக் கருத்திற் கொண்டு ரூபா 20,000 வீதம் முற்பணத் தொகை விடுவிக்கப்பட்ட போதிலும் முற்பணத்தை தீர்வு செய்யும் போது எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவினம் மேற்கொள்ளபடவில்லையென்பதை ஏற்றுக்கொள்கின்றேன் அவ்வாறே 2015.03.27 ஆந் திகதி இடம்பெற்ற 49 ஆவது கணக்காய்வுக் குழுவில் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் முற்பணத்தொகை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த செலவினம் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக காரணங்களுக்கான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**நிதிப் பிரமாணம் 371(2)**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முற்பணத் தொகைக்கிடையே 2014.06.09 ஆந் திகதி எஸ்.ஹேரத் அவர்களுக்கு செலுத்திய ரூபா 5000.00 தொகை தவிர எஞ்சியவை முற்பணமாக வழங்கப்பட்டவையல்ல. அத்துடன், மீளாய்வாண்டில் உப கட்டுநிதியாக (Cash Imprest) ஆக வழங்கப்பட்ட தொகையாகும்.

**(எ) 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் தொகுதி இலக்கம் v**

மேற்படி (i) ஆம் பந்தியில் குறிப்பிட்டதன் பிரகாரம் அரச நிதிச்சுற்றறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் மாதிரியாக எடுக்கும் போது அங்கு IV தொகுதியின் கீழ் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 922 இன் பிரகாரம் கீழ் மட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,000 எல்லையின் கீழ் தொடர்பாடல் செலவினமாக மீள்நிரப்ப முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 922 இன் பிரகாரம் கீழ் மட்ட நிறைவேற்று தரத்திற்குரிய தனிப்பட்ட உதவியாளர் பதவிக்காக ரூபா 4,000.00 ஆன எல்லையில் தொலைபேசிச் செலவினத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்படிகள்

கொடுப்பனவு 2012 இன் 21 ஆம் இலக்க நிதிக்குழு பரிந்துரை மற்றும் 2012.11.12 ஆந் திகதிய 1975 ஆவது முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்டது.

(ஏ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 09 ஆம் பந்தி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் தற்போது மனிதவள பாதீடொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் அதன் பிரதிகளை குறித்த நிறுவனங்களுக்கு எதிர்காலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

(ஐ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 02,03,04,05,06 ஆம் பிரிவுகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்படவில்லையென்பதை ஏற்றுக்கொள்வதுடன், விலை மதிப்புத் திணைக்களத்தின் மூலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி உட்பட திறைசேரி செயலாளரின் 2002.11.28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரித்து எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும்.

2.5 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2014.07.17 ஆந் திகதிய 07/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2011/2012 கல்வியண்டை அடிப்படையாகக் கொண்டு மேலதிக மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக நிறுவகத்தின் பதவியணிக்காக 20% படியொன்று செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அடிப்படை கல்வியாண்டாக எடுக்கப்பட்ட 2011/2012 கல்வியாண்டிற்காக பதிவு செய்யப்பட்ட 388 மாணவர்களுக்கு ஒப்பாக 2012/2013 கல்வியாண்டில் 430 மாணவர்கள் சேர்ப்பதற்கு நிறுவகத்திற்கு முடியுமாக இருந்ததுடன், 2011/2012 கல்வியாண்டின் திரட்டிய பாடநெறி மற்றும் பதிவுக் கட்டண வருமானமான ரூபா 34,619,133.33 தொகை 2012/2013 கல்வியாண்டின் போது ரூபா 61,514,526.71 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 150,000.00 ஆன கௌரவப் படிகள் கலாநிதி எஸ்.எஸ்.ரணவக்க அவர்களுக்கு 2014 – 2017 ஆம் ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பது உட்பட மாணவர் கைநூலொன்றும் (Student Handbook) நிறுவகத்திற்காக உள்ளக சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தயாரிப்பதற்காகவும் (rules, Regulations & By _ Laws) மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் ஒழுக்கக் கோவையொன்று (Code of Ethic) நிறவகத்தின் செயற்பாட்டிற்கு கைநூலொன்று (Manual Procedure) என்பவற்றிற்காக வழங்கப்பட்டது. இக்கொடுப்பனவு 2013.09.27 ஆந் திகதிய 202 ஆம் இலக்க முகாமைத்துவ சபையினதும் 2013.05.28 ஆந் திகதிய 420 ஆம் இலக்க நிர்வாக சபையினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன்

(இ) விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் குறுங்கால செயலமர்வுகள் ஒருங்கிணைப்பு / உதவி நடவடிக்கைகளுக்காக மற்றும் விரிவுரை மற்றும் செய்முறை பரிசோதனை நடவடிக்கைகளுக்காக தயாராவதற்கு செலவாகும் காலம் மற்றும் விசேட அறிவினைக் கருத்திற்கொண்டு வழமையான விரிவுரை மற்றும் செய்முறைக் கட்டணங்களை விட கூடுதலான கொடுப்பனவொன்றை நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரிலும் முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு

அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஒருங்கிணைப்பு படிகள், உதவிப் படிகள் மற்றும் விரிவுரைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டன.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் நிதி மீளாய்வு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானதென குறிப்பிடுகின்றேன்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) 1995 ஆம் ஆண்டின் நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு செய்தல் குறித்த பதவியணியினரால் முறையான நடைமுறையொன்று இல்லாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அங்கு இனங்காண முடியாததாக குறிப்பிடப்பட்டிருந்த 437 புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கையொன்றை எடுக்க முடியாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வின் போது மஹாஇலுப்பள்ளம நூலகத்தில் இனங்காண முடியாதென குறிப்பிடப்பட்ட 68 புத்தகங்கள் தொடர்பாக அப்புத்தகங்களுக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட உதவி நூலகரிடமிருந்து பெற்றுக்கொண்ட அவதானிப்புக்கள் முகாமைத்துவ சபையின் மூலம் நியமிக்கப்பட்ட விசேடகுழுவொன்றிற்கு தொடர்புபடுத்தப்பட்டு இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சிற்றுண்டிச்சாலைக்கான நீர் மற்றும் மின்சார கட்டணங்களும் புதிதாக மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் தற்போதைய நிலைமைக்கு இணங்கும் வகையில் விலையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் பிரகாரம் பின்வரும் பாடநெறிகளுக்காக எந்தவொரு மாணவரொருவரும் பதிவு செய்யப்படவில்லையென குறிப்பிடப்பட்ட போதிலும் 2014 ஆம் கல்வியாண்டில் அப்பாடநெறிகளுக்காக பின்வருமாறு மாணவர்கள் பதிவுசெய்திருந்தனர்.

| | | |
|---|---|---|
| I. | Ph.D(R) in Agriculture Biology | 04 |
| II. | Ph.D(R) in Crop Science | 01 |
| III. | Ph.D(R) in Food Science & Technology | 03 |
| IV. | M.Phil. Agriculture Extension | 09 |
| V. | M.Phil. Food Science & Technology | 03 |
| VI. | M.Phil. Agriculture Biology | 04 |

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு ஆராய்ச்சி மாணவர்களை அந்தந்த கல்விச் சபைகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கும் ஆராய்ச்சி முன்மொழிவு சமர்ப்பத்ததன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அங்கு அம்மாணவர்கள் நேர்முகப் பரீட்சையிலும் ஆராய்ச்சி முன்மொழிவுகளிலும் சமர்ப்பித்த (Research Proposal Presentation) மூலம் பெற்றுக்கொண்ட தகைமை அடிப்படையில் குறித்த கல்விச் சபையின் பரிந்துரை அடிப்படையில் குறித்த ஆராய்ச்சி மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் ஆய்வுப் பட்டப்படிப்பிற்காக மாணவர்கள் விண்ணப்பித்தும் குறித்த விண்ணப்பதாரிகள் நிர்ணயித்த விடயப்பரப்பு அல்லாதிருந்தால் அவர்கள் பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளப் படமாட்டார்கள்.

4.3 பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

2014.12.31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் 2015.01.25 ஆந் திகதி நிறுவகத்திற்கு கிடைத்ததுடன், அது 2015.02.27 ஆந் திகதி நடைபெற்ற 29 ஆவது நிதிக்குழுவிற்கு சமர்ப்பித்து அதன் பரிந்துரை அத்திகதியிலேயே நடைபெற்ற முகாமைத்துவ சபைக்கு அனுப்பி நியமிக்கப்பட்ட விசேட குழுவிற்கு இவ்வறிக்கை தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த குழுவின் பரிந்துரை அடிப்படையில் அசையாத இருப்புக்கள் மற்றும் அசையும் இருப்புக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) சேதமடைந்த வாகனம் தொடர்பாக காப்புறுதி உரித்தைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு 2014.03.27 ஆந் திகதி விண்ணப்பிக்கப்பட்டதுடன், குறித்த வாகனம் முழுமயாக சேதமடைந்த வாகனமொன்றாக கருதி ரூபா 650,000 ஐ நிறுவகத்திற்கு செலுத்துவதற்கு 2014.11.04 ஆந் திகதிய மற்றும் V/CH/1/010/1017567/2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் இணங்கியிருந்தது. அதன் பிரகாரம் சேதமடைந்த வாகனத்திற்குரிய நிதிப்பிரமாணம் 104 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு 2014.07.26 ஆந் திகதிய 207 ஆம் இலக்க முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் பேரில் 04 பேருடன் கூடிய விசேட குழுவொன்று 2014.09.11 ஆந் திகதி நியமிக்கப்பட்டனர். எனினும் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் வழங்குவதற்கு இணங்கிய குறித்த இழப்பீட்டுத் தொகை தொடர்பாக குழு இணக்கப்பாட்டை தெரிவிக்காததுடன், காப்புறுதியின் முழுப்பெறுமதியையும் வழங்குமாறு 2014.11.28 திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. குறித்த விண்ணபத்தைக் கருத்திற்கொண்டு இழப்பீட்டுப் பெறுமதியை ரூபா 750,000 வரை அதிகரிப்பதற்கு 2014.12.15 ஆந் திகதிய V/CH/1/010/1017567/2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் இணக்கப்பாட்டை தெரிவித்திருந்ததுடன், 2015.01.23 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முழுமையான காப்புறுதி தொகையினை வழங்குமாறு மீண்டும் கேட்கப்பட்டிருந்தது. குறித்த கோரிக்கையைக் கருத்திற் கொண்டு வாகனத்தின் முழுமையான காப்புறுதி தொகையான ரூபா 800,000 ஐ கொடுப்பனவு செலுத்துவதற்கு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 2014.03.10 ஆந் திகதிய V/CH/1/010/1017567/2014 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இணங்கத்தை தெரிவித்திருந்ததுடன், 2015.03.19 ஆந் திகதி கூடிய குழுவினால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் முழுமையான காப்புறுதி பெறுமதியை செலுத்தும் நிபந்தனைக்கு இணங்கி விபத்தினால் சேதமடைந்த நிலைமையில் இருந்த வாகனத்தின் உரித்தை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டு 2015.04.01 ஆந் திகதி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015.04.29 ஆந் திகதி ரூபா 796,050 தொகை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் எமது நிறுவகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் விவசாய நூலகத்தின் பௌதீக புத்தக மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2014.07.25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதன் இறுதி அறிக்கை 2014.11.10 ஆந் திகதி பணிப்பாளருக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படாத புத்தகங்கள் சஞ்சிகைகள் தொடர்பாக நூலகத்திற்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட உதவி நூலகரினால் 2015.01.30 மற்றும் 2015.03.03 ஆந் திகதி பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட அவதானிப்புக்களை உள்ளடக்கிய அறிக்கை நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் மூலம் நியமிக்கப்பட்ட குழுவொன்றிற்கு தற்போது தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த குழுவின் பரிந்துரை

கிடைத்தவுடன் அதனை முகாமைச் சபைக்கு தொடர்புபடுத்தி உரிய எதிர்வரும் செயற்பாடுகள் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

### பேராசிரியர்/ வெளிவாரி பேராசிரியர்/சிரேஷ்ட விரிவுரையாளர் - ii தரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வெற்றிடமாக உள்ள 03 பேராசிரியர் பதவிகள், 02 வெளிவாரி பேராசிரியர் பதவிகள் 03 சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள் என்பவற்றிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட யூஜீசீ/எச்/ஆர்/09/01/59 மற்றும் 19.03.2008 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிறுவகத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உழைத்த வருமானத்திலிருந்து மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேவையான சந்தர்ப்பங்களில் குறுகிய கால எல்லைக்காக இப்பதவிகளுக்காக கல்விசார் பதவியணியினரின் பரிந்துரையின் கீழ் விரிவுயையாளர்கள் சேவை.வக்கு ஆட்சேர்க்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் இப்பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சிரேஷ்ட விரிவுரையாளர் (ii ஆம் தரம்) 3 பதவிகளில் ஒரு பதவிக்கான நிதிஏற்பாட்டை பயன்படுத்தி வியாபார முாமைத்துவம் (MBA) கல்விச் சபைக்காக செய்முறையாளராக (Tutor) டீ.எம்.கே.பீ.திசாநாயக்க அவர்கள் 2015.01.01 ஆந் திகதி முதல் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன். முகாமைத்துவ சபை மற்றும் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விவசாய செயற்திட்ட கல்விச் சபைக்காக செய்முறையாளர் ஒருவரும் (Tutor) 2015.09.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### ஒருங்கிணைப்பாளர் பதவி

வெற்றிடமாக காணப்பட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக ரீ.ஏ.ஏ.என்.சிரிவர்தன அவர்கள் 2015.04.10 ஆந் திகதி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### சிரேஷ்ட உதவி நூலகர் பதவி

இப்பதவி 2014.11.14 வெற்றிடமாகியிருந்ததுடன், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2014.1.24 ஆந் திகதி பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் மூன்று பேர் விண்ணப்பம் செய்திருந்ததுடன், அதில் ஒரு நபர் மாத்திரம் தகைமைகளைப் பெற்றுக்கொண்டிருந்தார் அதன் பிரகாரம் 2015.01.25 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவால் நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டது. எனினும் தெரிவுக்குழு விண்ணப்பதாரியைச் சேர்த்துக்கொள்வதற்கு பரிந்துரை செய்யாதிருந்ததுடன், போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாததால் இப்பதவிக்காக மீண்டும் ஒருமுறை விண்ணப்பங்களை கோருவதற்கும் அப்போது உதவி நூலகர்களையும் சேர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் திறந்த அடிப்படையில் விண்ணப்பங்களை கோருவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பரிந்துரை முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் மீண்டும் விண்ணப்பங்களை கோருவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சாரதி பதவிகள்

இப்பதவிகளுக்காக பணிப்பொறுப்பு அடிப்படையில் சேர்க்கப்பட்ட சாரதி ஒருவரின் சேவையை நிரந்தரமாக்குவதற்காக தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் அவரால் எமது நிறுவகத்தின் 60-5134 வேன் வண்டி திடீர் விபத்திற்கு உட்படுத்தப்பட்டமையால் அவரின் ஒப்பந்த காலம் நீடிக்கப்படாதிருந்ததுடன், நிறுவகததின் முகாமைச் சபையின் அங்கீகாரம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அச்சாரதியின் சேவை முடிவுறுத்த நேர்ந்ததுடன், சேவையை நிரந்தரமாக்குவதற்கு இருந்த விண்ணப்பத்தை அகற்றிக்கொள்வதற்கு

நேர்ந்ததுடன், அதற்காக 2015.01.27 ஆந் திகதி நடைபெற்ற நிர்வாகக் கூட்டத்தின் அங்கீகாரம் 2015.02.15 ஆந் திகதி எமக்கு கிடைத்திருந்ததுடன், அதற்காக மீண்டும் அப்பதவிகளை நிரப்புவதற்கு தேவையான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அவ்வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் பதவி

தொழிலாளர் பதவியொன்று நிறுவகத்தின் மாணவர்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட விடுதிக்காக தேவையான விடுதிப்பொறுப்பாளர் பதவிக்கு மாற்றுவதற்கு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வெற்றிடமாக உள்ள ஏனைய தொழிலாளர் பதவிகளை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2013 – 2017 காலப்குதிக்ககாக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2013 ஆம் ஆண்டிலிருந்து முகாமைத்துவ சபையின் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்டு இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு என்பவற்றின் செயலமர்வில் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் கருத்திற் கொண்டு 2014 யூலை 16 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சில் நடாத்தப்பட்ட செயலமர்வில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இறுதியாக திருத்திய கூட்டிணைந்த திட்டத்திற்காக 2015 சனவரி 31 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்றத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி அமைச்சிற்கும் ஆண்டினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரதிகளை நிறுவகத்தின் கணக்குப் பிரிவில் பேணிச செல்லப்படுவதுடன், தேவைப்படும் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியும்.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

(அ) நிறுவகத்தில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. அவர்கள் வசமிருக்கும் வளங்களைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தினதும் இணைந்த நிறுவனங்கள் / நிலையங்களில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களால் நிறைவேற்றப்படுகின்ற அனைத்துச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்ற காலாண்டு மற்றும் அரையாண்டு அறிக்கை பல்கலைக்கழகத்தின் கணக்காய்வு குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றது.

(ஆ) நிறுவகத்திற்காக குறிப்பான உள்ளகக் கணக்காய்வு பதவியணியினரொன்று இல்லாதிருந்ததுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் இணைந்த விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் ஏனைய நிலையங்களினதும் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஆதலால் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி 2014 ஆம்

ஆண்டில் நிறைவேற்றக் கூடிய அளவில் 02 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

5.4 கணக்காய்வுக் குழு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த விடயங்களில் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட்டும் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்தல் வருடாந்த அறிக்கைக்கு உள்ளடக்குவதற்கான அவதானிப்புக்கள் உள்ளடக்கிய அறிக்கைகள் பொது முயற்சிகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் / வழிகாட்டல்கள் தொடர்பான மீளாய்வு உள்ளக / வெளிய கணக்காய்வு அறிக்கை, முகாமைத்துவ கடிதங்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் ஒவ்வொரு கணக்காய்வு குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடுவதற்கும் அதன் பரிந்துரைகள் முகாமைத்துவ சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.5 <u>கொள்வனவுத் திட்டம்</u>

விவசாய விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்காக வருடாந்தம் வழங்கப்படுகின்ற திறைசேரி ஏற்பாட்டின் அளவு வருடாந்த அடிப்படையில் வழங்கப்படுவதுடன் அதன் பிரகாரம் வருடாந்த பாதீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அரசின் மூலம் வழங்கப்படுகின்ற நிதிஏற்பாட்டின் அளவு நிச்சயமாக மதிப்பிட முடியாமையால் 3 ஆண்டுகள் போன்ற நீண்ட காலப்பகுதிக்கு கொள்வனவுத் திட்டமொன்று தயாரிப்பது நடைமுறை ரீதியானதல்லது என்பதால் வருடாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.6 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

(அ) பாதீடு தயாரிக்கப்பட்டதன் பின்னர் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினத் தலைப்புக்களில் முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவினங்களை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் மேற்கொள்ளப்படாததன் காரணமாக செலவினத் தலைப்புக்களில் பற்றாக்குறை மற்றும் மிகை ஒதுக்கீடு ஏற்பட்டிருந்தது. எதிர்வரும் வருடங்களுக்காக பாதீட்டைத் தயாரிக்கும் போது விசேட கவனம் செலுததப்பட்டு முரண்களை குறைக்கும் வகையில் மிகவும் நடைமுறை ரீதியில் பாதீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) பாதிடப்பட்ட செலவினத்தினையும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே முரண்களை குறைக்கும் வகையில் நடைமுறை ரீதியில் பாதீட்டைத் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

6 <u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு பிரிவுத் தலைவர்கள் மற்றும் பதவியணியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உங்களது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து விளக்கங்களும் சரியானதென தனிப்பட்ட ரீதியில் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம்: பேராசிரியர் S.சமித 15.02.2016

பணிப்பாளர், விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகம்

பிரதிகள் : 1. செயலாளர், உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
2. தலைவர், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு
3. செயலாளர், நிதி அமைச்சு
4. உபவேந்தர், பேராதனைப் பல்கலைக்கழகம்